Registered as a Newspaper
பக்கங்கள் 04

யாழ்ப்பாணம்
விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM
Peoples Daily
மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | ஆவணி 03 | [19-08-1993] | வியாழக்கிழமை | ஓசை 182


## திறந்த இருதய சத்திர சிகிச்சை கொழும்பில் மீண்டும் ஆரம்பம்

சிறி ஜெயவர்த்தனபுர பெரியாஸ்பத்திரியில் மீண்டும் திறந்த இருதயச் சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது. ஆலோசகச் சத்திர சிகிச்சை நிபுணராக டாக்டர் எஸ்.ஜே. ஸ்டீபன் நியமிக்கப்பட்டது குறித்து எழுந்த தகராறைத் தொடர்ந்து சென்ற வருடம் பெப்ரவரியில் இச் சத்திர சிகிச்சை செய்வது நிறுத்தப்பட்டிருந்தது. டாக்டர் ஸ்டீபன் நியமனம் செய்யப்பட்டதை ஊர்ஜிதம் செய்து சுப்ரீம் கோர்ட் கடந்த மாதத்தில் தீர்ப்பளித்திருந்ததைத் தொடர்ந்து இந்தத் தகராறு தற்பொழுது தீர்த்துவைக்கப்பட்டுள்ளதென்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. டாக்டர் ஸ்ரீபன் பதவியைபொறுப்பேற்று கொண்டதை யடுத்து மீண்டும் திறந்த இருதய சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்படும் என அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன

# வடக்கு - கிழக்கிற்கு இடைக்கால நிர்வாகம்;

# சபாநாயகர் முகமட்டின் புதிய திட்டம்

## சகலகட்சியும் இணைந்ததேசிய அரசு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பகுதிகளுக்கு இடைக்கால நிர்வாகம் ஒன்றை அமைக்கும் யோசனை ஒன்றைப் பாராளுமன்றச் சபாநாயகர் எம். எச். எம். முகமட் முன்வைத்துள்ளார். இத் திட்டத்தை கட்சிகளின் பரிசீலனைக்காக அதன் தலைவர்களுக்கும் அனுப்பிவைத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முகமாக வடக்குக் கிழக்குப் பகுதிகளில் இடைக்கால நிர்வாகம் ஒன்றை அமைப்பது என்ற தனது யோசனை ஒன்றை சிறிலங்காவின் பாராளுமன்ற சபாநாயகர் எம். எச். எம். முகமட் முன்வைத்துள்ளார்.

இவர் தனது மேற்படி யோசனை தொடர்பாக சிறிலங்கா பாராளுமன்ற அரசியல் கட்சித் தலைவர்களின் முடிவை அறிந்து கொள்ளும் முகமாக அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் அமைக்கப்படவுள்ள இடைக்கால நிர்வாகத்தில் தேசிய அரசாங்கம் எனும் பெயரில் சிறிலங்காவின் அனைத்து அரசியல் கட்சிகளும் அங்கம் வகிக்கும் எனவும், இதில் அனைத்துக் கட்சிகளும் இணைந்து 15 உறுப்பினர்களுக்கு மேற்படாது அங்கம் வகிப்பர் எனவும் சபாநாயகர் எம். எச். எம். முகமட் முன்வைத்துள்ள தனது யோசனையில் தெரிவித்துள்ளார்.

இவரது மேற்படி யோசனையில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினர் பின்னணியில் இருப்பதாக சில எதிர்க் கட்சிகள் சுட்டிக் காட்டியுள்ளன.

## மண்டைதீவு காவலரண்மீது புலிகள் எறிகணை வீச்சு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுச் சந்தியில் உள்ள சிறிலங்கா இராணுவக் காவலரண்மீதுவிடுதலைப் புலிகள் நேற்று எறிகணைத் தாக்குதலை நடத்தினர்.

காலை 6.30 மணியளவில் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதனையடுத்து சிறிலங்கா இராணுவத்தினர் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர். புலிகள் மேற்கொண்ட தாக்குதலினால் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை.

## தீவுப் பகுதி ராணுவத்தினர் பரவலான ஷெல் வீச்சு

(குருநகர்)

தீவுப்பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று நாள் முழுவதும் விட்டு விட்டு யாழ். கரையோரப் பகுதிகளை நோக்கி எறிகணைத் தாக்குதலை நடத்திக்கொண்டிருந்தனர்.

குருநகர், பாஷையூர், கொட்டடி மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் எறிகணைகள் வீழ்ந்து பலத்த சத்தத்துடன் வெடித்தன.

நேற்றுக் காலை 7-30 மணியளவில் குருநகர் கடற்கரை வீதி, மவுண்கார்மேல் வீதி இரு வீடுகளின் மீது எறிகணைகள் வீழ்ந்து வெடித்தன.

அவ்வேளை வீடுகளில் எவரும் இருக்காதபடியால் உயிர்ச்சேதமோ, காயங்களோ ஏற்படவில்லை.

அதேவேளை பாஷையூரில் இரு எறிகணைகள் கடலில் வீழ்ந்து வெடித்தன காரணமாக சேதம் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (21)

## கரையோரப்பகுதி மக்கள் நேற்று இடம் பெயர்வு

(குருநகர்)

நேற்றுக் காலையில் தீவகப் பகுதி சிறிலங்கா இராணுவ முகாம்களில் இருந்து ...

... தன.

இடம்பெயர்ந்த மக்கள் கையாயபிள்ளையார், பெருமாள் கோவில்களிலும் - மற் ...

## பிரச்சினையிலிருந்து நழுவவே முகமத்தின் திட்டம்

### சுதந்திரக்கட்சி உறுப்பினர் தெரிவிப்பு

[கொழும்பு]

வடக்கு-கிழக்கில் தோன்றியுள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுமுகமாக சபாநாயகர் எம். எச். எம். முகமட் ... காணும் முகமாக ஆக்கபூர்வமான திட்டம் எதனையும் முன் வைக்காது நழுவிக்கொள்வதற்காகவும், அரசு எந்த ஒரு தீர்வுத் திட்டத்தையும் இது ... த்தை முன்வைத்து அதனை எதிர்க்கட்சிகளிடம்கையளித்து விடுவதன்மூலம் தான் தப்பித்துக்கொள்ள அரசு முனைகிறது சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. ...

## படையினரால் கைதான சில இளைஞர்கள் விடுதலை

(வவுனியா)

சிறிலங்கா இராணுவ சோதனைச் சாவடிகளில் வைத்து இராணுவத்தினராலும் புளொட்குழுவினராலும் கைது செய்யப்பட்ட பல வடபகுதி இளைஞர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 7.6.93 அன்று வடபகுதியை நோக்கி வந்த வேளை நட்டாங்கண்டல் வவுனிக்குளத்தைச் சேர்ந்த நல்லதம்பி மகாதேவன் (வயது 29) என்பவர் தாண்டிக்குளத்தில் வைத்து புளொட்குழுவினரால் கைது செய்யப்பட்டு மலர் மாளிகைக்குப் பின்புறமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த பின் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டார்.

மேலும் கடந்த 16-ஆம் திகதி வடபகுதிக்கு வெளியே செல்ல முற்பட்ட வேளை பேயாடிக்கூளாங்குள காவலரண் இராணுவத்தினரால் 18 இளைஞர்கள் கைது செய்யப்பட்டு தாண்டிக்குள முகாமில் ஒரு நாள் தடுத்து வைக்கப்பட்டபின் விடுதலை செய்யப்பட்டனர். தடுத்து வைக்கப்பட்டிருந்த போது தாம் இராணுவ புலனாய்வாளர்களால் விசாரணைக்குட்படுத்தப்பட்டதாக விடுதலையான சிவநகர்புதுக்குடியிருப்பைச் சேர்ந்த சிவராசா ரமேஸ் (வயது 20) என்பவர் தெரிவித்தார். இவருடன் கைதானவர்களில் நேர்முகப் பரீட்சைக்காக வவுனியா கச்சேரிக்குச் சென்ற நால்வரும் அடங்குவர் எனவும் இவர்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளைச்சேர்ந்தவர்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பொலிஸ் காவலில் இருந்து தப்பி ஓடிய சிப்பாய்

(காலி)

பொலிஸ் காவலில் இருந்து தப்பி ஓடிய கொள்ளை சந்தேகநபர் ஒருவர் முன்னர் இராணுவ சேவையிலிருந்து தப்பிஓடிய இராணுவ சிப்பாய் எனத் தெரியவந்துள்ளது.

... கொன வலஸ்முல்ல பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்திருந்தபோதே அண்மையில் இவர் தப்பி ஓடிவிட்டதாக பொலிஸ் தலைமை அலுவலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(குருநகர்)

தீவுப்பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று நாள் முழுவதும் விட்டு விட்டு யாழ். கரையோரப் பகுதிகளை நோக்கி எறிகணைத் தாக்குதலை நடத்திக்கொண்டிருந்தனர்.

குருநகர், பாஷையூர், கொட்டடி மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் எறிகணைகள் வீழ்ந்து பலத்த சத்தத்துடன் வெடித்தன.

நேற்றுக் காலை 7-30 மணியளவில் குருநகர் கடற்கரை வீதி, மவுண் கார்மேல் வீதி இரு வீடுகளின் மீது எறிகணைகள் வீழ்ந்து வெடித்தன.

அவ்வேளை வீடுகளில் எவரும் இருக்காதபடியால் உயிர்ச்சேதமோ, காயங்களோ ஏற்படவில்லை.

அதேவேளை பாஷையூரில் இரு எறிகணைகள் கடலில் வீழ்ந்து வெடித்தன காரணமாக சேதம் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (21)

## கரையோரப்பகுதி மக்கள் நேற்று இடம் பெயர்வு

(குருநகர்)

நேற்றுக் காலையில் தீவகப் பகுதி சிறிலங்கா இராணுவ முகாம்களில் இருந்து யாழ். கரையோரப் பகுதி மக்கள் குடியிருப்பு பகுதிகளை நோக்கி மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலால்பீதியடைந்த நூற்றுக் கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்ந்தன.

இடம்பெயர்ந்த மக்கள் கைலாயபிள்ளையார், பெருமாள் கோவில்களிலும் - மற்றும் யாழ். பேராலயம், அடைக்கலமாதா -புனித யாகப்பர் ஆலயங்கள் -புனித சம்பத்திரிசியார் கல்லூரி, கன்னியர் மடம் பாடசாலை ஆகியவற்றில் தஞ்சமடைந்தனர். (21)

## கொட்டடியில் வீழ்ந்த ஷெல்லினால் நால்வர் காயம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் கொட்டடிப் பகுதிகளை நோக்கி மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலால் நான்கு பேர் படுகாயமடைந்தனர்.

கொட்டடி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பொன்னுத்துரை சிவகுமார் (வயது 18), சந்திரசேகரன் ஜெகதீஸ்வரி (வயது 30), சந்திரசேகரன் லக்சன் (வயது6) செல்வி பசுபதிபிறேமகுமாரி (வயது 23) ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர்.

இவர்கள் நேற்று யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

மேற்படி பகுதியில் இருந்து ஏவப்பட்ட மற்றுமொரு எறிகணை நல்லூர் ஆலயத்தை அண்மித்த விளையாட்டு மைதானமொன்றில் வீழ்ந்து வெடித்தது வெடிச்சத்தம் கேட்ட உடன் நல்லூரில் கூடி நின்ற பக்தர்கள் நாலாபுறமும் சிதறி ஓடினர் இதனால் சேதம்எதுவும் ஏற்பட்டதாக தெரியவரவில்லை. (பா)

## எறிகணை வீச்சினால் வீடு பலத்த சேதம்

மண்டைதீவு இராணுவம் நேற்றுக்காலை குருநகர் பகுதியை நோக்கி ஏவிய எறிகணை ஒன்று வீழ்ந்து வெடித்ததில் குருநகர் கார்மேல் வீதியில் வசிக்கும் செல்வரத்தினம் அவர்களின் வீட்டின் மேற்கூரை பாரிய சேதமுற்றது.

இவ் வீட்டை இரண்டு எறிகணைகள் தாக்கியுள்ளன ஏற்கனவே வீட்டில் இருந்தவர்கள் பாதுகாப்புத்தேடி வெளியேறியமையால் எவருக்கும் உயிராபத்து ஏற்படவில்லை.

நேற்று காலை முதல் மண்

(4ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் மாவட்டத்தில் 5 மைல் நீள தொடர் அரண்

மன்னார் மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் தற்போது தொடர் காவலரண் ஒன்றை அமைத்துள்ளனர். இத் தொடர் காவலரண் மாந்தையிலிருந்து சிறுநாவற்குளம் சிறிலங்கா இராணுவ முகாமூடாக வங்காலை வரையான 5 மைல் தூரத்திற்கு அமைக்கப்பட்டுள்ளது.

சில தினங்களாக மன்னாரில் பெருமளவு கிராமங்கள் உள்ளடக்கி அமைக்கப்பட்டிருந்த 20 மைல் நீளமான இராணுவ வேலி அகற்றப்பட்டமை தெரிந்ததே.

அமைப்பது என்ற தனது யோசனை ஒன்றை சிறிலங்காவின் பாராளுமன்ற சபாநாயகர் எம். எச். எம். முகமட் முன்வைத்துள்ளார்.

இவர் தனது மேற்படி யோசனை தொடர்பாக சிறிலங்கா பாராளுமன்ற அரசியல் கட்சித் தலைவர்களின் வடக்கு கிழக்கு மாகாணத்தில் அமைக்கப்படவுள்ள இடைக்கால நிர்வாகத்தில் தேசிய அரசாங்கம் எனும் பெயரில் சிறிலங்காவின் அனைத்து அரசியல் கட்சிகளும் அங்கம் வகிக்கும் எனவும், இதில் அனைத்துக் கட்சிகளும் யில் தெரிவித்துள்ளார்.

இவரது மேற்படி யோசனையில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினர் பின்னணியில் இருப்பதாக சில எதிர்க் கட்சிகள் சுட்டிக் காட்டியுள்ளன.

## பிரச்சினையிலிருந்து நழுவவே முகமத்தின் திட்டம்

### சுதந்திரக்கட்சி உறுப்பினர் தெரிவிப்பு

[கொழும்பு]

வடக்கு-கிழககில் தோன்றியுள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுமுகமாக சபாநாயகர் எம். எச். எம். முகமட் அனுப்பிவைத்துள்ள யோசனைத் திட்டம் ஆளும் ஐக்கிய தேசியக்கட்சியின் நழுவல் திட்டம் என சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச்சேர்ந்த திஸநாயக்கா என்பவர் அரசைக் குற்றம் சாட்டியுள்ளார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முகமாக ஆக்கபூர்வமான திட்டம் எதனையும் முன் வைக்காது நழுவிக்கொள்வதற்காகவும், அரசு எந்த ஒரு தீர்வுத் திட்டத்தையும் இதுவரை முன்வைக்கவில்லை என எதிர்க்கட்சியினரின் குற்றச்சாட்டிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவுமே இப்படியான ஒரு திட்டத்தை முன் முன் வைத்துள்ளது.

இப்படியான ஒரு திட்டத்தை முன்வைத்து அதனை எதிர்க்கட்சிகளிடம்கையளித்துவிடுவதன்மூலம் தான் தப்பித்துக்கொள்ள அரசு முனைகிறது

சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா உடனடியாக தனதுபதவியை ராஜினாமாச் செய்து தேர்தல்வரை நாட்டின் முழுப் பகுகளினதும் பொறுப்பை இடைக்கால நிர்வாகத்திடம் ஒப்படைக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார்.

## இடைக்கால நிர்வாகம் மூலம் இராணுவ நடவடிக்கைகளை தீவிரமாக்க அரசு முயற்சி!

(பாரிஸ்)

வடகிழக்கு மாகாணத்தில் மீண்டும் மாகாண சபைகளை உருவாக்கி அதில் பிறதமிழ் குழுக்களை இடம்பெறச் செய்து இவர்களின் உதவியுடன் இராணுவ நடவடிக்கையை தீவிரபடுத்த சிறிலங்கா அரசு திட்டமிட்டுள்ளது.

இத்தகவலை விடுதலைப் புலிகளின் பாரிஸ் அலுவலகத்தை சேர்ந்த லோரன்ஸ் திலகர் வெளியிட்டுள்ளார்.

இதே சமயம் வடகிழக்கு மாகாணசபையை இடைக்கால மாகாண நிர்வாகமாக நிறுவுமாறு ஈ. பி. டி. பி. சிறிலங்கா அரசை கோரியுள்ளது இம் மாகாணசபையில் பல அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை இடம்பெறச்செய்து மாகாண சபையை தொடர்ந்து நடத்தலாம் இதன்மூலம் தேர்தலையும் நடத்தலாம் என்றும் ஈ.பி.டி.பி கூறியுள்ளது.

## ச. தே. செஞ்சிலுவைகுறித்து பாராளுமன்றத்தில் கேள்வி

(கொழும்பு)

வடக்கு -கிழக்குப் பகுதியில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை அரசாங்கம் உன்னிப்பாக கவனித்து வருகிறது என பாராளுமன்ற விவகார அமைச்சர் கலாநிதி விமல் விக்கிரமசிங்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

உள்நாட்டு பாதுகாப்பிற்கு ஆபத்தை ஏற்படுத்தும் எந்த நடவடிக்கையிலும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஈடுபட்டது என்பதற்கு எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை. சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் பக்கசார்பின்றி நடக்கின்றது என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

இதேசமயம் விடுதலைப்புலிகளால் தடுத்துவைக்கப்பட்டுள்ள 32 போர் கைதிகளையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக விடுவிக்க அரசு சகல முயற்சிகளையும் எடுத்து வருகின்றது என்றும் போர்க் கைதிகள் பரிமாற்றத்திற்காக

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புக்காரா நோட்டம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான புக்காரா குண்டு வீச்சு விமானம் கடந்த சில நாட்களாக யாழ். நகர்மற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

என்பவர் தாண்டிக்குளத்தில் வைத்து புளொட்குழுவினரால் கைது செய்யப்பட்டு மலர் மாளிகைக்குப் பின்புறமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த பின் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டார்.

மேலும் கடந்த 16ஆம் திகதி வடபகுதிக்கு வெளியே செல்ல முற்பட்டவேளை 20) என்பவர் தெரிவித்தார். இவருடன் கைதானவர்களில் நேர்முகப் பரீட்சைக்காக வவுனியா கச்சேரிக்குச் சென்ற நால்வரும் அடங்குவர் எனவும் இவர்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளைச்சேர்ந்தவர்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பொலிஸ் காவலில் இருந்து தப்பி ஓடிய சிப்பாய்

(காலி)

பொலிஸ் காவலில் இருந்து தப்பி ஓடிய கொள்ளை சந்தேகநபர் ஒருவர் முன்னர் இராணுவ சேவையிலிருந்து தப்பிஓடிய இராணுவ சிப்பாய் எனத் தெரியவந்துள்ளது.

காலிமாவட்டத்தில் வலஸ்முல்ல பொலிஸ் பகுதியில் 3 வீடுகள் கொள்ளையடித்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட பிரஸ்தாப நபரை மேல் விசாரணைக்கென வலஸ்முல்ல பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்திருந்தபோதே அண்மையில் இவர் தப்பி ஓடிவிட்டதாக பொலிஸ் தலைமை அலுவலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அன்றைய தினம் தடுப்புக் கைதிகளுக்கு பாதுகாப்பு கடமையில் இருந்த கான்ஸ்டபிள் ஹேமச்சந்திர சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

## 50 கொலைகள் புரிந்தவர் பொலிசாரால் கைது

(அனுராதபுரம்)

ஐம்பதிற்கு மேற்பட்ட கொலைகளைச் செய்தவரென சந்தேகிக்கப்படும் நபர் ஒருவரை கலேன்பிந்துணு வெவப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

கடந்த 8 ஆம் திகதியன்று கலேன் பிந்துணு வெவ அழுத்திவுல் வெவ எனுமிடத்தைச் சேர்ந்த பெண்ணை பலாத்காரம் புரிய முற்பட்ட போது மேற்படி சந்தேகநபர் கத்திக் குத்துக்கு இலக்கானதாக தெரிவிக்கப்படுகிறது.

படுகாயமடைந்த மேற்படி நபர் அனுராதபுரம் வைத்திய சாலையில் பொலிசாரின் பாதுகாப்பில் சிகிச்சை பெற்று வருகின்றார். மேற்படி சம்பவம் தொடர்பாக கலேன் பிந்துணு வெவப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே. வே. புஸ்பகுமார விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்.

## 'வாதுவ' கப்பல் மாவுடன் அடுத்தவாரம் வரும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கான சுமார் 4000 மெற்றிக் தொன் மாவுடன் "வாதுவ" கப்பல் அடுத்தகிழமை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையவுள்ளது.

தற்சமயம் இக் கப்பலில் கொழும்புத்துறை முகத்தில் வைத்து மா ஏற்றும் வேலைகள் நடைபெற்றுவருகின்றன. மா ஏற்றும் வேலைகள் முடிந்ததும் அங்கிருந்து புறப்படும் இக்கப்பல் எதிர்வரும் 24ஆம் திகதி அல்லது 25ஆம் திகதி பருத்தித்துறையை வந்தடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (பா)

## இரண்டு மாத உணவு அரச அதிபர் கையிருப்பில்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கு இரண்டு மாதங்களிற்கு போதுமான அளவு உணவுப் பொருள்கள் அரச அதிபரின் கையிருப்பில் வைக்கப்பட்டுள்ளதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி உணவுப் பொருள்கள் அடுத்துவரும் மழைக் காலத்தில் ஏற்படக்கூடிய உணவுத் தட்டுப்பாட்டை ஓரளவு பூர்த்திசெய்து கொள்ளுமுகமாக கையிருப்பில் வைக்கப்பட்டுள்ளதாக அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (பா)

# வரி விளம்பரம்


## தவறிவிட்டது

கடந்த 13 8 93 வெள்ளிக்கிழமை அல்லிப்பளைத் தரிப்பிடத்தில் வடபிராந்திய சிற்றூர்திச் சேவைச்சங்கத்தின் நாளாந்த சேவைப் பணப் பற்றுச்சீட்டுப் புத்தகம் (புத் இல 173. தொடர் இல. 51601- 51900) தொலைந்துவிட்டது கண்டெடுத்தவர்கள் பேற்டி சங்கத்தின் யாழ். டஸ் நிலையக்காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

(5711)

## பழுது பார்க்க வாங்க, விற்க

பழுதடைந்த சகற் றேடியோக்கள், மேசை சுவர்-கைக் கடிகாரங்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும், விற்கப்படும், நிபுணர்களால் பழுது பார்த்துக் கொடுக்கப்படும். டில்காவாச் அன்ட் றேடியோ வேக்ஸ் 284. ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். (வானவில் கூல்பார் அருகாமை) கிளை-: சண்டி வீதி, சாவகச்சேரி (சி-7168)

## விற்பனைக்கு உண்டு

கமராக்கள் OM I OM 2, Fx. 7 பில்லர் லென்ஸ், சூம் லென்ஸ்கள் விற்பனைக்கு உண்டு. சேனசன்ஸ் இல, 10, செட்டித்தெரு, நல்லூர் யாழ்ப்பாணம். (5717)

## தவறிவிட்டது

திருநெல்வேலிக்கும், உரும்பராய்க்கும் இடையில் சங்கிலி ஒம் பென்டனுடன் காணமற் போய்விட்டது கண்டெடுத்தவர்கள் திருமதி புஞ்சலிங்கம் உரும்பராய் தெற்கு உரும்பராய் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(5722)


## விண்ணப்ப முடிவு திகதி பிற்போடப்பட்டது

யாழ் மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாசத்தினால் சனசமூக நிலையங்களுக்கிடையில் நடாத்த உத்தேசிக்கப்பட்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள விளையாட்டுப் போட்டிகளுக்கும் கலை இலக்கியப் போட்டிகளுக்குமான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவு திகதி இம்மாதம் 20-ம் திகதி வரை பிற்போடப்பட்டுள்ளதாக இதன் செயலாளர் திரு க. நவரட்ணம் தெரிவித்துள்ளார்.

# பலவத்தை உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

ஐந்து நாட்களாக பலவத்தைத் தடைமுகாமில் இருந்தவர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த உண்ணாவிரதம் முழுமையாகக் கைவிடப்பட்டதாக இம்முகாமின் பொறுப்பாளரான வேதநாயகம் என்பவர் கூறினார். உண்ணாவிரதத்தில் ஈடுபட்டவர்களில் ஐவர் 500.600 அடி உயரத் தாங்கிகளின் மேல் உண்ணாவிரதம் இருந்ததைக் கருத்தில் கொண்டும் அவர்களது உடல் நிலை மோசமடைந்து வந்ததினாலும் அவர்களுக்குவிளக்கங்கள் அளிக்கப்பட்ட பின்னர் அவர்கள் இம்முடிவுக்கு உடன்பட்டதாகவும் தெரிவித்தார். மனித உரிமைகள் சங்கம் மூலமாக இவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டதாகக் கூறிய பாதுகாப்புஅமைச்சு இவர்களுக்கு எதிராகப் பாதுகாப்பு அமைச்சினால் வழக்குகள் தொடரப்பட்டிருப்பதாகவும் விரைவில் அவை விசாரணைக்கு எடுக்கப்படுமெனக் கூறப்பட்டதாகவும் தெரிவித்தது.

# இனப்பிரச்சினைத் தீர்வில் வெளியார் தலையீடு கூடாது

இனப்பிரச்சினைக்கு இணக்கப்பாடான ஏற்கக்கூடிய தீர்வு எதுவும் இதுவரை எட்டப்படவில்லை. பாராளுமன்ற தெரிவுக் குழுவின் முயற்சியும் வெற்றி பெறவில்லை! எனினும் எமது பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக வெளியார் எவரையும் அனுமதிப்பது சரியாகத் தோன்றவில்லை. என்று சர்வதேச விழி புணர்வு நிறுவனத்தின் இயக்குநர் குமார் ரூபசிங்க கூறியுள்ளார். இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஐ நா தலையீடு பற்றிய விவகாரத்தில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதே விடயத்தில் கருத்து வெளியிட்ட ஐக்கிய சோசலிசக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினரான ராஜா கொல்லுரே இனப்பிரச்சினை என்பது உள்நாட்டு விவகாரமே என்றும், தேசிய அணுகுமுறைக்கு ஊடாகவே இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படல் வேண்டும் என்றும் தெரிவித்தார். அத்துடன் வெளிநாட்டு அரசுகள் அல்லது சர்வதேச நிறுவனங்கள் இப்பிரச்சினையில் தீர்வு காண எமக்கு உதவக் கூடுமெனினும் அதற்கு ஈடாக எமது இறைமையைக் கோரக் கூடாது எனக்கேட்டுக் கொண்டார்.

மகாபோதி சங்கத்தின் சிறிலங்கா கிளையின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான காமினி ஜயசூரியா இது பற்றிக் கூறுகையில், யூகோஸ்லாவியாவின் இன்றைய நிலைமை எமக்கு படிப்பினையாக வேண்டும் என்றும் வடக்கு கிழக்கு மக்களின் நலன்களை மட்டும் கருத்தில் கொண்டு பிரதேச சுயாட்சிக்கு வகை செய்யும் பரிந்துரைகள் எதையும் ஏற்கக்கூடாது என்றும் தெரிவித்தார்.


# 3-ம் ஆண்டு நினைவலைகள்



தாயின் மடியில்

12 - 08 - 1972

மணலாறு மண்ணில்

18 - 8 - 1990

## வீரவேங்கை மூப்பனார்

(முத்துலிங்கம் பிரியதாஸன்)

தம்பி நீ எம்மை விட்டு எட்டிவிட்டாய்!


# சமய அறிவுப் போட்டி முடிவுகள் வெளி வந்தன

– இன்று பரிசளிப்பு

நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் நடத்திய சைவசமய அறிவுப் போட்டியின் அதி மேற்பிரிவில் யாழ் இராமநாதன் கல்லூரியைச் சேர்ந்த செல்வி தங்கவேலு தவனேஸ்வரி முதலாம் இடத்தையும், இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த செல்வி மகாதேவன் மாலினி இரண்டாம் இடத்தையும், மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த செல்விலோகேஸ்வரன்றாஜிதா மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர். இப்போட்டியில் மேலும் ஐவர் தகைமை பெற்றுள்ளனர்.

மேற்பிரிவில் இந்துக்கல்லூரியைச் சேர்ந்த குணநாதன் சுதர்சன் முதலிடத்தையும், வேம்படி மகளிர் கல்லூரியின் செல்வி கணேசன் நிவேதிகா இரண்டாமிடத்தையும், யூனியன் கல்லூரியின் செல்வி சண்முகலிங்கம சர்மிளா மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர். இப் பிரிவில் மேலும் பதின்நான்கு பேர் தகைமை பெற்றுள்ளனர்.

மத்திய பிரிவில் இந்துக்கல்லூரியைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை குருபரன் முதலிடத்தையும் யூனியன் கல்லூரியைச் சேர்ந்த செல்வி தனபாலசிங்கம் கௌரி இரண்டாமிடத்தையும், மகாஜனாக் கல்லூரியைச் சேர்ந்த இராசரத்தினம் சிவாஜினி மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளனர். இப்பிரிவில் மேலும் இருபது பேர் தகைமை பெற்றுள்ளனர்.

கீழ்ப்பிரிவில் இந்துக்கல்லூரியைச் சேர்ந்த குணரெட்ணம் செந்தூரன் முதலிடத்தையும், ஸ்கந்தவரோதயக் கல்லூரியை சேர்ந்தசெல்வி சிவஞானராஜா ஆரபி இரண்டாமிடத்தையும், பரியோவான் கல்லூரியைச் சேர்ந்த கணேசன் சேந்தன் மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளனர். இப்பிரிவில்மேலும் பதினாறு பேர் தகைமை பெற்றுள்ளனர்.

இதேபோல் பண்ணிசைப் போட்டிகளில் பேற் பிரிவில் அளவெட்டியைச் சேர்ந்த செல்வி குமாரசுந்தரம் நீதிமதி முதலிடத்தையும். யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த செல்வி முருகையா ஜெயகௌரி இரண்டாம் இடத்தையும், இணுவிலைச் சேர்ந்த செல்வி அரியரட்ணம் துளசி மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர் இப்பிரிவில் மேலும் இருவர் தகைமை பெற்றுள்ளனர்.

மத்திய பிரிவில் இராமநாதன் கல்லூரியைச் சேர்ந்த செல்வி விக்டர் வடிவாம்பிகை ...

... அம் சர்மிளா இரண்டாம் இடத்தையும் சாவகச்சேரி இந்துக்கல்லூரியைச் சேர்ந்த செல்வி சபாரத்தினம் பிரேமினி மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர் மேலும் மூவர் தகைமை பெற்றுள்ளனர்.

கீழ்ப்பிரிவில் யூனியன் கல்லூரியைச் சேர்ந்த மகேந்திரராசா பிரவீணன் முதலிடத்தையும் இந்துக்கல்லூரியைச் சேர்ந்த தர்மகுலசிங்கம் இராசேந்திரா இரண்டாம் இடத்தையும்யூனியன் கல்லூரியைச் சேர்ந்த யோகநாதன் சிவராம் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர் மேலும் மூவர் தகைமை பெற்றுள்ளனர்.

இதேபோல் சமய அறிவு பேச்சு போட்டிகளிலும், மேற்பிரிவில் முதலிடத்தை மதிய கல்லூரியின் இலங்காபதி சிறீதரனும். இரண்டாமிடத்தை கொக்குவில் ஞான பண்டித வித்தியாசாலையின் செல்வி சாம்பசிவம் உதய இந்துவும் மூன்றாமிடத்தை இந்துக்கல்லூரியின் ஜெயராசா ஜெயகாந்தனும் பெற்றுக்கொண்டுள்ளனர் மேலும் இருவர் தகைமை பெற்றுள்ளனர்.

கீழ்ப்பிரிவில் அதி விசேட தரப்பிரிவு இந்துக்கல்லூரியின் கணேசன் சுஜீவனுக்கு வழங்கப்பட்டுள்ளது. இப்பிரிவில் முதலிடத்தை வேம்படி மகளிர் கல்லூரியின் செல்வி சண்முகரத்தினராசா மாதுமையாளும் இரண்டாமிடத்தை பரியோவான் கல்லூரியின் கணேசன் சேந்தனும மூன்றாமிடத்தை சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் சந்திரகுமாரன் மோகனாவும் பெற்றுக் கொண்டுள்ளனர். மேலும் இருவர் தகைமை பெற்றுள்ளனர்.

இப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் இன்று பிற்பகல் இரண்டு மணியளவில் நல்லூர் கந்தசாமி கோவிலின் மேற்கு வீதியில் அமைக்கப்பட்டுள்ள சுகாதார அலுவலக முன்றலில் வழங்கப்படவுள்ளது.

## கூட்டுறவு பயிற்சி நேர்முகப் பரீட்சை

யாழ் மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியினால் நடாத்தப்படுகின்ற கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர சாதாரண பிரிவு. கனிஷ்ட பிரிவு ஆகியவற்றிற்கான நேர்முகப் பரீட்சை 20-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை நடைபெறுறவுள்ளது. (22)

## நியமனம்

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் இரண்டாவது நிர்வாக அதிகாரியாக திரு. ...

# பிரஜாவுரிமைதிருத்தச்சட்டம் பாராளுமன்றில்நிறைவேற்றம்

இலங்கைக் குடியுரிமை சம்பந்தமான திருத்தச் சட்ட மூலம் பாராளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டது

வெளிநாட்டு முதலீட்டாளர் அல்லது தொழில்நிபுணர் ஒவருர் இலங்கைப் பிரஜாவுரிமை பெறுவதற்கு வகை செய்யும் பொருட்டு கொண்டு வரப்பட்ட குடியுரிமை சம்பந்தமான திருத்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டது.

இந்தச் சட்டமூலம் மீதான விவாதத்தை முடித்து வைத்துப் பேசிய அமைச்சர் விமல் விக்கிரமசிங்க தமது உரையில் பணத்துக்காக இலங்கை குடியுரிமை விற்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டினார்.


# SCIENCE ACADAMY

நெல்லியடி

94 A/L (மீட்டல் வினாவிடை வகுப்புக்கள்)

விலங்கியல்

Mr. சுபசீலன்

ஆரம்பம்: 21-08-93

பி. கு: 22 8-93 அனுமதிகள் யாவும் நிறுத்தப்படும். (சி-7214)

உ

தெல்லிப்பழை

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

?-8- 93 வியாழக்கிழமை

## கொடியேற்றம்

முற்பகல் 11.00 மணி

## மகோற்சவ காலப்பிரார்த்தனை

ஓம் துர்க்கா, தாயே, அம்மா உன்திருவடிகளுக்கு நமஸ்க்காரம்.

இன்று எம்மினத்தவர் படும் அல்லற்பாடுகளைக் களைந்து அமைதி நிலையை ஏற்படுத்தித் தருவாயாக! வெற்றிக்குரிய கொற்றவைத் தாயே.

எம்மை அழிவுப் பாதையிலிருந்து மீட்டெடுக்க வல்லவள் நீயேதான். உனது பிள்ளைகள் படும் அவலநிலையை உன்னை யன்றி வேறு யாராலே உணர முடியுமம்மா! துன்பச்சுமையை மேலும் மேலும் சுமக்க வைக்காதே தாயே! எம் மண்ணுக்கும் எமது மொழிக்கும் எம்மினத்துககும் விமோசனத்தை அருளி அமைதியாக வாழவைப்பாயாக!

அம்மா, தாயே, துர்க்கா உன் திருவடிகளே சரணம், சரணம், சரணம்.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை (5712)

தவர்கள் திருமதி புஞ்சலிங்கம் உரும்பராய் தெற்கு உரும்பராய் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(5722)

## விண்ணப்ப முடிவு திகதி பிற்போடப்பட்டது

யாழ் மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாசத்தினால் சனசமூக நிலையங்களுக்கிடையில் நடாத்த உத்தேசிக்கப்பட்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள விளையாட்டுப் போட்டிகளுக்கும் கலை இலக்கியப் போட்டிகளுக்குமான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவு திகதி இம்மாதம் 20-ம் திகதி வரை பிற்போடப்பட்டுள்ளதாக இதன் செயலாளர் திரு க. நவரட்ணம் தெரிவித்துள்ளார்.

இதுவரை இந்நிகழ்ச்சிகளுக்கு விண்ணப்பிக்காத சனசமூக நிலையங்களும் வேறு நிகழ்ச்சிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் சனசமூக நிலையங்களும் 20-8 93ற்கு முன்னர் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (17)

## பாலர்பாடசாலை திறப்பு

(வடமராட்சி)


வடமராட்சி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் அமைக்கப்பட்ட பாலர் பாடசாலை ஒன்று இன்று வியாழக்கிழமை மந்திகையில் காலை 9 மணிக்கு திறந்து வைக்கப்படவுளளது

வடமராட்சி அரசியல்துறை பொறுப்பாளர் திரு பா பைந்தமிழன் தலைமையில் நடைபெறும் இத்திறப்புவிழாவிற்கு பருத்தித்துறை பிரதேச சபை செயலாளர் திரு ச செல்வந்திநாதர் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

## பயிற்சி வகுப்பு ஆரம்பம்

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் யுவதிகளுக்கான பயிற்சி வகுப்பு ஒன்று இன்று வியாழக்கிழமை தம்பசிட்டி மெ. மி. த. க பாடசாலையில் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது

யுவதிகளுக்கான மனையியல். கைப்பணி போன்ற பயிற்சிகள் நடைபெறவுள்ளன இப்பயிற்சி வகுப்பை பருத்தித்துறை பிரதேச செயலர் திரு. சி. முருகேசம்பிள்ளை திறந்துவைப்பார். இவ்வைபவத்தில் புலோலி மத்தி கிராம உத்தியோகத்தர் திரு. கே. சண்முகநாதன், யாழ். உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திரு. மகேந்திரன், மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அதிகாரி ஆகியோரும் கலந்து கொள்வர். (யோ)



தாயின் மடியில்

12 - 08 - 1972

மணலாறு மண்ணில்

18 - 8 - 1990

## வீரவேங்கை மூப்பனார்

(முத்துலிங்கம் பிரயதாஸன்)

தம்பி நீ எம்மை விட்டு எட்டிவிட்டாய்!
உனைக் காணாது நாமிங்கு வாடுகின்றோம்
வருமளவும் காத்திருப்போம் வாழ்த்துகின்றோம்
எழுந்து வா! மீண்டும் எழுந்துவா!

துயரில் வாடும்
– குடும்பத்தினர்

ஆர் கந்தையா வீதி,
சாவகச்சேரி.

[5716]

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



### கப்டன் வண்ணன்

(சீவரத்தினம் கலைஜீவன்)

(முன்னாள் அரசியல் பொறுப்பாளர்,
கிளிநொச்சி மாவட்டம்)

பிறப்பு: 8-4-1964

வீரச்சாவு: 19 8 1989

மண்ணில் மறைந்தாலும்
எண்ணத்தில் வாழும் எம்மவனே!
நாளை வெல்லும்,
எம் தேசத்தின்
மூலைகள் லும்
உன் பெயர் சொல்லும்!

உன்பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா,
உறவினர், நண்பர்கள்.

கனகபுரம்,
கிளிநொச்சி.

(சி/7113)

...பரியோவான் கல்லூரியைச் சேர்ந்த கணேசன் சேந்தன் மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளனர். இப்பிரிவில்மேலும் பதினாறு பேர் தகைமை பெற்றுள்ளனர்.

இதேபோல் பண்ணிசைப் போட்டிகளில் மேற் பிரிவில் அளவெட்டியைச் சேர்ந்த செல்வி குமாரசுந்தரம் நீதிமதி முதலிடத்தையும், யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த செல்வி முருகையா ஜெயகௌரி இரண்டாம் இடத்தையும், இணுவிலைச் சேர்ந்த செல்வி அரியரட்ணம் துளசி மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர் இப்பிரிவில் மேலும் இருவர் தகைமை பெற்றுள்ளனர்.

மத்திய பிரிவில் இராமநாதன் கல்லூரியைச் சேர்ந்த செல்வி விக்டர் வடிவாம்பிகை முதலிடத்தையும், சோமஸ்கந்தா கல்லூரியைச் சேர்ந்த செல்வி சிவபாதம் கவிதா இரண்டாமிடத்தையும் யூனியன் கல்லூரியைச் சேர்ந்த செல்வி சத்சணமூர்த்தி சர்வாஜினி மூன்றமிடத்தையும் பெற்றுள்ளனர். மேலும் மூவர் தகைமை பெற்றுள்ளனர் கீழ்ப் பிரிவில் மகாஜனாக் கல்லூரியைச் சேர்ந்த செல்வி சோமசுந்தரம் பகவதி முதலிடத்தையும், இந்து மகளிர் கல்லூரியின் செல்வி சிறீபாலச்சந்திரன் தாட்சாயணி இரண்டாம் இடத்தையும், மகாஜனாக்கல்லூரியின் செல்வி மகாலிங்கசிவம் லதாங்கி மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளனர் மேலும் நால்வர் தகைமை பெற்றுள்ளனர்.

இதேபோல் சமய அறிவுக் கட்டுரைப் போட்டிகளில் மேற்பிரிவில் மகாஜனாக்கல்லூரியைச் சேர்ந்த செல்வி கிருஷ்ணபிள்ளைமலர்ச்செல்வி முதலிடத்தையும். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த நடேசபிள்ளை ஞானவேல் இரண்டாமிடத்தையும் சாவகச்சேரி இந்துக்கல்லூரியைச் சேர்ந்த செல்வி சுபாரத்தினம் பிரேமினி மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளனர் மேலும் இருவர் தகைமை பெற்றுள்ளனர்.

கீழ்ப்பிரிவில் வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த செல்வி மகேந்திரராசா துசிதா முதலிடத்தையும், பரி. யோ. வான் கல்லூரியைச் சேர்ந்த கணேசன் சேந்தன் இரண்டாமிடத்தையும், யூனியன் கல்லூரியைச் சேர்ந்த செல்வி தனபாலசிங்கம் கௌரி மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளனர் மேலும் ஐவர் தகைமைபெற்றுள்ளனர்.

இதேபோல் சமய அறிவு கவிதைப்போட்டிகளில் இந்துக் கல்லூரியைசேர்ந்தசயனொளிபவன் முகுந்தன், முதலிடத்தையும் யூனியன்கல்லூரியைச் சேர்ந்த செல்வி சண்முகலிங்...

...சாமி கோவிலின் மேற்கு வீதியில் அமைக்கப்பட்டுள்ள சுகாதார அலுவலக முன்றலில் வழங்கப்படவுள்ளது.

## கூட்டுறவு பயிற்சி நேர்முகப் பரீட்சை

யாழ் மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியினால் நடாத்தப்படுகின்ற கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர சாதாரண பிரிவு, கனிஷ்ட பிரிவு ஆகியவற்றிற்கான நேர்முகப் பரீட்சை 20-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை நடைபெறுறவுள்ளது. (22)

## நியமனம்

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் இரண்டாவது நிர்வாக அதிகாரியாக திரு. எஸ் மகேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவரிற்கான மேற்படி நியமனம் வடகிழக்கு மாகாண சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது

மேலும் இவர் ஏற்கனவே யாழ் பிராந்திய சுகாதார அலுவலகத்தில் நிதி உதவியாளராக கடமையாற்றி வந்தார். என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மகாபொலக் கொடுப்பனவு 8-ஆம் தவணைப்பணம்

பல்கலைக்கழக மாணவர்களுக்கான 8-ஆம் தவணை மகாபொலக் கொடுப்பனவை 19-08 93 முதல் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள்வங்கி நவீன சந்தைக் கிளையில் வழங்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இக் கொடுப்பனவுகள் பற்றிய முழு விபரங்களும் அறிவுறுத்தல்களும் பல்கலைக்கழக விளம்பரப் பலகைகளில் இடப்பட்டுள்ளன. இதற்கமைவாக கொடுப்பனவை உரித்துடையமாணவர்கள்பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

– பதிவாளர்

(சி/7219)

...படுத்தித் தருவாயாக! வெற்றிக்குரிய கொற்றவைத் தாயே.

எம்மை அழிவுப் பாதையிலிருந்து மீட்டெடுக்க வல்லவள் நீயேதான். உனது பிள்ளைகள் படும் அவலநிலையை உன்னை யன்றி வேறு யாராலே உணர முடியுமம்மா! துன்பச்சுமையை மேலும் மேலும் சுமக்க வைக்காதே தாயே! எம் மண்ணுக்கும் எமது மொழிக்கும் எம்மினத்துககும் விமோசனத்தை அருளி அமைதியாக வாழவைப்பாயாக!

அம்மா, தாயே, துர்க்கா உன்திருவடிகளே
சரணம், சரணம், சரணம்.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை

(5712)

## நினைவு கூருகின்றோம்... 1993-08-19

1988ஆம் ஆண்டு மணலாறு நித்திகைக்குளம் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட மிதிவெடி விபத்தில் எமைப்பிரிந்த-

**கோபு** (கதிர்காமத்தம்பி தர்மராசா - புதூர் - மட்டு)

முல்லைத்தீவில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். றொபேட்** (சுந்தரம் லோகநாதன் - கிருஷ்ணபுரம்- கிளிநொச்சி)

1989ஆம் ஆண்டு அம்பாறை - கல்முனைப் பகுதியில் இந்தியப்படையினரால் கொலை செய்யப்பட்டு எமைப் பிரிந்த-

**லெப். தேவா** (நாராயணன் சாமித்தம்பிகுமார் - பாண்டிருப்பு, கல்முனை - அம்பாறை)

மாங்குளம் சந்தியில் அமைக்கப்பட்டிருந்த இந்தியப் படையினரின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித்தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

கிளிநொச்சி மாவட்ட அரசியல் பொறுப்பாளர்-

**கப்டன் வண்ணன்** (சீவரத்தினம் கலைஜீவன் - இல 65, கனகபுரம் - கிளிநொச்சி)

யாழ் - கரவெட்டிப் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

1990ஆம் ஆண்டு சுகயீனம் காரணமாக எமைப் பிரிந்த-

**பிரியதர்சன்** (பத்மநாதன் பரமேஸ்வரன் - பெரிய தோட்டம், புத்தூர் கிழக்கு - யாழ்)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில கொல்லப்பட்ட வீட்டுவேலைகள் செய்பவரான இளம்பெண். வந்தாறுமூலையைச் சேர்ந்த விவசாயி உட்பட 02 தமிழர்கள். பெரியபுல்லுமலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்

திருமலை - அலஸ் தோட்ட முகாம் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டு எரிக்கப்பட்ட 24 தமிழர்கள்.

1992ஆம் ஆண்டு மட்டு - காரைதீவு பொலிஸ் நிலையத்தில் வைத்து கொலை செய்யப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

மட்டு - புதுக்குடியிருப்புப் பகுதியில் கடலில் மீன்பிடிக்கச் சென்று காணாமல் போன 02 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

### தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி 7216)

நூலகம் மன்றம் யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

சிறு சிறு கடமைகளையும், சீராகவும் துல்லியமாகவும் செய்து முடிப்பதன் மூலம் எய்தலாம் இனிதே உற்சாகம்.

— ஃபிரெடரிக் ஃபேபர்.


ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 19-08-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05


# கிழக்கு பேரினவாதத்தின் முதற்குறி

**"வடக்கு** பறிபோய்விட்டது. கிழக்கையாவது காப்பாற்றிக்கொள்ள வேண்டும்." இது சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு அவரின் முக்கிய ஆலோசகரான தயான் ஜெயத்திலக்கா வழங்கிய யோசனைகளில் ஒன்றாகும். இரண்டாம் கட்ட ஈழப்போர் தொடங்கி சுமார் இரண்டரை வருடங்களின் பின்னர், அவரால் வழங்கப்பட்ட ஆலோசனை இதுவாகும். அதாவது விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாகத் தோற்கடிக்க முடியாது என்ற நிலையை உணர்ந்து கொண்டபின்னர் தயான் ஜெயத்திலக்கா வழங்கிய ஆலோசனையே இதுவாகும்.

அதாவது வடக்கை இழந்துவிட்டாலும் கிழக்கையாவது ஆக்கிரமித்துக்கொள்ளவேண்டும் என்ற தயான் திலக்காவின் யோசனையானது தெற்கு அயர்லாந்து பறிபோய்விட்டாலும், வடக்கையாவது தக்கவைத்துக் கொள்ளவேண்டும் என்ற பிரிட்டனின் நிலைப்பாட்டை ஒத்ததாகும். ஆனால், கிழக்கை ஆக்கிரமிப்பதும் தக்கவைத்துக்கொள்வதுமான நடவடிக்கையானது சிறிலங்கா அரசாங்கத்தின் புதிய ஒரு நடவடிக்கை என்பதைவிட 'சுதந்திர காலத்தில்' இருந்து மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர் முயற்சியின் ஒரு பகுதி என்றே கொள்ளலாம்.

இதன் அடிப்படையிலேயே கிழக்கில் தொடர்ச்சியான குடியேற்றங்களை சிங்கள அரசாங்கங்கள் அமைத்துவந்தன. இக்குடியேற்றங்கள் கிழக்கு மாகாணத்தின் இன விகிதாசாரத்தையே மாற்றியமைத்துள்ளன. பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலம் சிங்களக் குடியேற்றவாசிகளின் கைக்கு மாறியது. இக்குடியேற்றங்களே இன்று சிங்களப் பேரினவாதம் கிழக்கை தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்கும், தக்கவைத்துக் கொள்ள முடியும் எனக் கருதுவதற்கும் முக்கிய உந்துதலிற்கும் இக்குடியேற்றத்திட்டங்கள் முன்னரே தடுக்கப்பட்டு இருக்குமாயின் இன்று வடக்கில் சிங்களப் பேரினவாதம் தனது கால்களை அகல வைக்க முடியாது தடுமாறுவது போன்றதொரு நிலை கிழக்கிலும் ...

## லலித் உயிருடன் இருந்தால் ஐ. தே. க. சேர விரும்பமாட்டார்

— எதிரிவீர பிரேமரத்ன

[கொழும்பு]

லலித் அத்துலத் முதலி இன்று உயிருடன் இருந்து ஏனைய நிலைமைகள் இப்படியே இருந்தால் அவர் நிச்சயமாக ஐ.தே.க வுடன் இணைந்து கொள்ள உத்தேசித்திருக்க மாட்டார். பதிலுக்கு இன்றைய ஐ. தே. க. அவரது தலைமையை ஏற்று ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியில் இணைந்து கொள்ள வழியேற்பட்டிருக்கும்.

இவ்வாறு ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்தவரும், மேல் மாகாண சபை உறுப்பினருமான எதிரிவீர பிரேமரத்ன கூறியுள்ளார். மேல் மாகாணசபையின் உறுப்பினர்களான ஒன்பது பேர் தமது நிலைப்பாட்டில் ஒத்த கருத்தையே கொண்டிருப்பதாகக் கூறும் இவர் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைப்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளை பகிரங்கமாகக் கண்டனம் செய்பவர் ஆவார். தம்போன்றவர்களின் நிலைப்பாட்டின் காரணமாக இக்கட்சிகளுக்கிடையே கூட்டணி ஏற்பட்டாலும் கூட மேல் மாகாணசபையின் நிர்வாகத்தில் எந்த மாற்றமும் வராது என்று சண்டே ஐலண்ட் இதழுக்குப் பேட்டியளிக்கையில் தெரிவித்த இவர் மேலும் கூறுகையில், பிரேமதாசா தலைமையிலான ஐ. தே. கவை வெல்ல முடியுமென்பதில் லலித் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார் எனவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பிரேமதாசாவின் காலத்தில் பலத்தைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட அதே விடயங்களையே இன்றைய ஐ. தே. க. மிகவும் தந்திரமான முறையில் நிறைவேற்றி வருகின்றது உடுகம்பொலவை ஜனாதிபதி விஜேதுங்கா காப்பாற்றிய முறை இதற்கு ஒரு உதாரணம் ஆகும் இது தானா ஜனநாயகம்? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

## இலங்கையில் இப்போது இரண்டு அதிகார மையங்கள்

— டயான் ஜயதிலக்க

[கொழும்பு]

இலங்கையில் தற்போது இரண்டு அதிகார மையங்கள் உண்டு. ஒன்று கொழும்பிலும், மற்றது ஈழத்திலும் செயற்படுகின்றது என்று லங்கா கார்டியன் பத்திரிகையின் இணை ஆசிரியர் டயான்ஜயதிலக்க கூறியுள்ளார்.

புலிகளை எப்படிக் கையாளக் கூடாது என்ற தலைப்பில் சண்டே ஒப்சேவர் பத்திரிகையில் எழுதிய கட்டுரையொன்றில் அவர் மேலும் குறிப்பிடுகையில், இலங்கை என்னும் இச்சிறுதீவில் இத்தகைய இரு அதிகார மையங்கள் இருக்கமுடியாது எனவும், அதனால் விடுதலைப் புலிகளுடன் இணக்கம் எதையும் காண முனையக் கூடாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## இரணவில சுற்றுப்பிரகாரம் பொலிசாரால் தடுப்பு

(கொழும்பு)

கத்தோலிக்க சமயத்தினர் இரணவிலவில் நடத்திய சுற்றுப்பிரகாரத்தை பொலிசார் தடுத்து நிறுத்தினர்.

கடந்த வெள்ளியன்று, கத்தோலிக்கச் சமயப் பெண்களும், சிறார்களும் 'சிலுவைப் பாதை' சுற்றிக்கொண்டு வோய்ஸ் ஒவ் அமெரிக்கா ஒலிபரப்புக் கட்டடம் அமைக்கப்படும் இடத்தை அண்மித்ததும் தடுத்து நிறுத்தப்பட்டதாகக் கத்தோலிக்க திருச்சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இது தாங்கள் 'சிலுவைப் பாதை' சுற்றும் வழமையான வழி என்று ஆயர் மாநாட்டின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

'சிலுவைப்பாதையை' தடுத்து நிறுத்தியமை அடிப்படை மனித உரிமை மீறல் என்றும், வோய்ஸ் ஒவ் அமெரிக்காவுக்கும் அரசுக்கும் இடையிலான ஒப்பந்த விபரங்களை வெளியிடுமாறும், அப் பகுதியில் மக்கள் சுதந்திரமாக நடமாட அனுமதிக்குமாறும் செயற் பணிப்பாளர் வண. ஒஸ்வால்ட் பீ பேர்த் அரசைக் கேட்டுள்ளார்.

நுளம்பு மற்றும் இலையான்களுக்கு எதிராக

## கொழும்பு மாநகரசபை போர் பிரகடனம்

# சந்திரிகாவின் 90 நாள் ஆட்சி மோசமான முன் உதாரணம்

மேல் மாகாணசபை உறுப்பினர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சந்திரிகாவின் தொண்ணூறு நாள் ஆட்சி ஒரு மோசமான முன்னுதாரணமாக இருக்கின்றது என்று மேல் மாகாண சபை உறுப்பினரும், மேல் மாகாண சபையின் முன்னாள் அமைச்சருமான லோரன்ஸ் மெதிவெல கூறியுள்ளார்.

மேல் மாகாண முதல்வராக திருமதி சந்திரிகா குமாரணதுங்க பதவியேற்றபோது மக்கள் மத்தியில் மிகுந்த எதிர்பார்ப்பு காணப்பட்டதாகவும், இப்போது ஆளுங்கட்சியின் உறுப்பினர்களே கூட வாக்காளர்களைச் சந்திப்பதற்கு தயங்க வேண்டிய தொரு நிலை ஏற்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்

அத்துடன் முன்னாள் முதலமைச்சர் சுசில் மூனசிங்கவின் ஆட்சியுடன் ஒப்பிடும் போது சந்திரிகாவின் தொண்ணூறு நாள் ஆட்சி மோசமானதாக இருக்கின்றது என்றும் குறிப்பிட்டார்.

மாகாணசபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தித்திட்டங்கள் யாவும் இடை நிறுத்தப்பட்டுள்ளன என்று குறிப்பிட்ட அவர் பத்து மில்லியன் ரூபா மதிப்பீட்டில் களுத்துறை, கம்பகா மற்றும் கொழும்பு மாவட்டங்களில் 4000 வீடுகள் கட்டும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு அரைகுறையாக இருப்பதாகவும் சுட்டிக் காட்டினார். வீடுகளுக்காக காத்திருப்பவர்கள் அதிகாரிகளை அணுகினால் அவர்கள் இடமாற்றப்பட்டு, புதியவர்கள் நியமனம் பெற்றுள்ளனர் என்றும் புதிதாக நியமனம் பெற்றவர்களுக்கு இவ்வேலைத் திட்டம் பற்றி எதுவும் தெளிவாகத் தெரியவில்லை என்றும் குறிப்பிட்டார்.

மேல் மாகாணசபைக்கு உட்பட்ட பிரதேச சபைகளின் செயலாளர்கள் மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்களுடன் 1993ஆம் ஆண்டின் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் சம்பந்தமாக கலந்துரையாடும் கூட்டமொன்றுக்கு முதல்வர் என்ற வகையில் அழைப்பு விடுத்த சந்திரிகா எல்லா வேலைத்திட்டங்களையும் இடை நிறுத்தும் படி பணிப்புரை விடுத்தார்.

மேல்மாகாண சபைக்கு நிதி இல்லை என்றும், அதிகாரங்கள் இல்லை என்றும் கூறி வரும் திருமதி சந்திரிகா கூட்டங்களுக்குக் கூட நேரத்திற்கு வருவதில்லை என்றும் மெதிவெல தெரிவித்தார். கூட்டங்களுக்கு குறிக்கப்பட்ட நேரத்திலிருந்து இரண்டு இரண்டரை மணித்தியாலங்கள் வரை தாமதித்தே இவர் வருவதால் அழைக்கப்பட்டவர்கள் காத்திருக்க வைக்கப்படுகின்றனர் எனவும் சுட்டிக் காட்டினார்.

## அநுரா - சந்திரிகா வாஷிங்டனில் சந்திப்பு

(கொழும்பு)

மேல் மாகாண முதல்வர் சந்திரிகா குமாரணதுங்கவும், சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் பதவியிலிருந்து இடை நிறுத்தப்பட்ட அவரது சகோதரரான அநுரா பண்டாரநாயக்காவும் வாஷிங்டனில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர். மேற்படி இருவருக்குமிடையிலான சந்திப்பு பண்டாரநாயக்கா குடும்பத்தினரின் நண்பரொருவரின் வீட்டில் எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ளதாக பண்டாரநாயக்கா குடும்பத்தின் நெருங்கிய வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளதாகக் கொழும்பிலிருந்து வெளியாகும் லங்காதீப பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இச்சந்திப்பின்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் தோன்றியுள்ள பிரச்சினைகளை முடிவிற்குக் கொண்டு வருவது தொடர்பாகவே இருவரும் பேசவுள்ளனர்.

விடுமுறையைக் கழிப்பதற்காக தனது இரு புதல்வர்களுடனும் கடந்த 6ஆம் திகதி லண்டன் சென்ற சந்திரிகா சில நாட்களுள் வாஷிங்டன் செல்வார் எனவும் 13-ம் திகதி லண்டன் சென்ற அநுரா பண்டாரநாயக்கா அங்கு இரு தினங்கள் தங்கியபின் வாஷிங்டன் சென்றாரெனவும் தெரிய வருகிறது.

அங்கு இவ் இருவருக்குமிடையிலான சந்திப்பு முடிவுற்றதும் சந்திரிகா உடனடியாக கொழும்பு திரும்புவார் எனவும் அநுரா அடுத்தமாதம் 5-ம் திகதியளவில் கொழும்பு திரும்புவார் எனவும் அப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பழைய இடதுசாரிகளுடன்

## மேடையில் இருப்பதை விட கிரிக்கட் ரசிப்பதே மேலானது

அநுரா பண்டாரநாயக்க

(கொழும்பு)

கே. பி.சில்வா, வை. பி. சில்வா, நிஹால் பெரேரா, மற்றும் தர்மசிறி சேனநாயக்க போன்றோருடன் கூட்டத்தில் கலந்து கொள்வதை விட கிரிக்கட் பார்த்து ரசிப்பது மேலானது என்று அநுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

வெள்ளியன்று கொழும்பில் அவர் வெளியிட்ட அறிக்கையொன்றில் மேலும் குறிப்பிடுகையில் 1953-ம் ஆண்டின் ஹர்த்தாலை நினைவுபடுத்தும் முகமாக சுதந்திரக் கட்சியின் தலைமையில் பொதுஜன மக்கள் முன்னணியினால் நுகேகொட மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்... பெரேரா போன்றோருடன் மேடையில் அமர்ந்திருப்பதை நான் விரும்பவில்லை பதிலுக்கு அன்றைய தினத்தில் சுமார் 50,000க்கும் மேற்பட்டவர்களுடன் நானும் கெத்தாராம விளையாட்டரங்கில் அமர்ந்திருந்து றோசான் மகாநாம, அர்ஜுனா ரணதுங்க போன்றோர் இந்திய அணிக்கெதிராகவிளையாடிய கிரிக்கட்டை ரசித்துக் கொண்டிருந்தேன், எனவும் அநுரா பண்டாரநாயக்க கூறியுள்ளார்.

## ஆசிரிய ஆலோசகர் பயிற்சி

அனைத்துக் கல்விக்கோட்டங்களிலும் இணைப்புச் செய்யப்பட்டு கடமையாற்றும் சகல ஆசிரிய ஆலோசகர்களுக்குமான பயிற்சி நெறி 26.08.93 முதல் 29.8.93 ...

தலைமைத்துவ

வதுமான நடவடிக்கையானது சிறிலங்கா அரசாங்கத்தின் புதிய ஒரு நடவடிக்கை என்பதைவிட 'சுதந்திர காலத்தில்' இருந்து மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர் முயற்சியின் ஒரு பகுதி என்றே கொள்ளலாம்.

இதன் அடிப்படையிலேயே கிழக்கில் தொடர்ச்சியான குடியேற்றங்களை சிங்கள அரசாங்கங்கள் அமைத்துவந்தன. இக்குடியேற்றங்கள் கிழக்கு மாகாணத்தின் இன விகிதாசாரத்தையே மாற்றியமைத்துள்ளன. பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலம் சிங்களக் குடியேற்றவாசிகளின் கைக்கு மாறியது. இக்குடியேற்றங்களே இன்று சிங்களப் பேரினவாதம் கிழக்கை தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்கும், தக்கவைத்துக் கொள்ள முடியும் எனக் கருதுவதற்கும் முக்கிய உந்துதலிற்கும் இக்குடியேற்றத்திட்டங்கள் முன்னரே தடுக்கப்பட்டு இருக்குமாயின் இன்று வடக்கில் சிங்களப் பேரினவாதம் தனது கால்களை அகல வைக்க முடியாது தடுமாறுவது போன்றதொரு நிலை கிழக்கிலும் ஏற்பட்டிருந்திருக்கக் கூடும்.

அதாவது, அபிவிருத்தி என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட சகல நடவடிக்கைகளும், தமிழர் பிரதேசத்தை ஆக்கிரமிக்கும் திட்டங்களாகவே இருந்தன. விவசாயம்.மீன்பிடி மட்டுமல்ல, வீதிகள் விரிவாக்கம், திருமலையை வர்த்தகமையமாக்கும் யோசனைகள் ஆகிய சகல நடவடிக்கைகளுமே, ஆக்கிரமிப்புத்திட்டங்களாகவே இருந்தன. அதாவது சிங்களப் பேரினவாதத்தின் நோக்கம் தமிழர் தாயகத்தை எவ்வளவிற்கு ஆக்கிரமித்துக் கொள்ளமுடியுமோ அந்தளவிற்கு ஆக்கிரமித்துக் கொள்வதென்பது அதன் முடிவாகும்.

இந்நிலையில்தான் தற்பொழுது இராணுவ அதிரடிப்படைப் பிரிவில் மேலும் 10 படைப்பிரிவுகளை சேர்த்துக்கொள்ள இராணுவ தலைமை முடிவு செய்துள்ளது. இதற்கென அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளதோடு, பயிற்சிக்கென இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன. இப்படைப்பிரிவுகள் கிழக்கு மாகாணத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியை விஸ்தரிப்பதோடு, கைப்பற்றப்படும் பகுதிகளை நிர்வகிக்கப் பயன்படுத்தவுள்ளதாக அறிய முடிகின்றது. அதாவது கிழக்கை பூரண இராணுவ ஆக்கிரமிப்பிற்குள் கொண்டு வந்து நிர்வகிப்பதே நோக்கமாகும்.

இதற்கு ஏற்றாப் போலவே கிழக்கு மாகாணத்தில் இருந்து விடுதலைப்புலிகள் வெளியேறும் வரை பேச்சுவார்த்தை என்பது சாத்தியமில்லை எனச் சிறிலங்கா அரசு அறிவித்துள்ளது. அதாவது கிழக்கு குறித்து தமிழர் தரப்பு எவரும் பேச முடியாது என்ற நிலையை இராணுவ வெற்றி மூலம் ஈட்டுவதே அரசின் நோக்கமாகும்.

சிறிலங்கா அரசாங்கத்தின் இந்நிலைப்பாடு. இனப்பிரச்சினைக்கு அண்மையில் ஒரு அரசியல் தீர்வு சாத்தியமில்லை என்பதை மட்டுமல்ல. தமிழர் தரப்பு ஏற்கக்கூடிய எந்த ஒரு தீர்வுத்திட்டத்தையும் என்றைக்குமே சிங்கள அரசு முன்வைக்கப் போவதில்லை என்பதைக் காட்டுவதாகவே உள்ளது. அரசின் இம்முடிவானது. இலங்கையில் யுத்தமானது அண்மையில் ஓய்வதற்கான வாய்ப்புஎதுவும் இல்லை என்பதை வெளிக்காட்டி நிற்பதோடு, தமிழரைப் பொறுத்து தமது சுதந்திர வாழ்விற்காக நீண்ட போராட்டம் ஒன்றைச் செய்யவேண்டிய நிர்ப்பந்தத்தையும் உருவாக்கியுள்ளது.

(கொழும்பு)

கத்தோலிக்க சமயத்தினர் இரணவிலவில் நடத்திய சுற்றுப்பிரகாரத்தை பொலிசார் தடுத்து நிறுத்தினர்.

கடந்த வெள்ளியன்று, கத்தோலிக்கச் சமயப் பெண்களும், சிறார்களும் 'சிலுவைப் பாதை' சுற்றிக்கொண்டு வோய்ஸ் ஒவ் அமெரிக்கா ஒலிபரப்புக் கட்டடம் அமைக்கப்படும் இடத்தை அண்மித்ததும் தடுத்து நிறுத்தப்பட்டதாகக் கத்தோலிக்க திருச்சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இது தாங்கள் 'சிலுவைப் பாதை' சுற்றும் வழமையான வழி என்று ஆயர் மாநாட்டின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

'சிலுவைப்பாதையை' தடுத்து நிறுத்தியமை அடிப்படை மனித உரிமை மீறல் என்றும், வோய்ஸ் ஒவ் அமெரிக்காவுக்கும் அரசுக்கும் இடையிலான ஒப்பந்த விபரங்களை வெளியிடுமாறும், அப் பகுதியில் மக்கள் சுதந்திரமாக நடமாட அனுமதிக்குமாறும் செயல் பணிப்பாளர் வண. ஒஸ்வால்ட் பீ போத் அரசைக் கேட்டுள்ளார்.

நுளம்பு மற்றும் இலையான்களுக்கு எதிராக

# கொழும்பு மாநகரசபை போர் பிரகடனம்

[கொழும்பு]

கொழும்பு மாநகரசபை நுளம்பு மற்றும் இலையான்களுக்கு எதிரான போர் ஒன்றைப் பிரகடனம் செய்துள்ளது.

மாநகர சபையின் எல்லைக்குள் இருக்கும் 47 வட்டாரங்களிலும் இருக்கும் ஒவ்வொரு வீடுகளுக்கும் மாநகரசபை ஊழியர்கள் சென்று நுளம்பு மற்றும் இலையான்களுக்கு எதிரான மருந்துகளை தெளிப்பர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வூழியர்கள் தம்முடன் எடுத்துச் செல்லும் அட்டை ஒன்றில் ஒவ்வொரு வீட்டிலும் இருக்கும் கால்வாய் மற்றும் கழிவு வாய்க்கால் போன்ற நுளம்பு மற்றும் இலையான்கள் தோன்றக் கூடிய இடங்களை குறித்துக் கொண்டு அவற்றை திருத்தும்படி வீட்டின் பிரதான குடியிருப்பாளர் வேண்டப்படுவார். இவ்வாறு திருத்தாத வீட்டுக் குடியிருப்பாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநகரசபையின் பிரதம சுகாதார உத்தியோகத்தர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வால அவர்கள் இடமாற்றப்பட்டு, புதியவர்கள் நியமனம் பெற்றுள்ளனர் என்றும் புதிதாக நியமனம் பெற்றவர்களுக்கு இவ்வேலைத் திட்டம் பற்றி எதுவும் தெளிவாகத் தெரியவில்லை என்றும் குறிப்பிட்டார்.

மேல் மாகாணசபைக்கு உட்பட்ட பிரதேச சபைகளின் செயலாளர்கள் மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்களுடன் 1993ஆம் ஆண்டின் அபிவிருத்தி வேலைத் திட்டங்

## ஆசிரிய ஆலோசகர் பயிற்சி

அனைத்துக் கல்விக்கோட்டங்களிலும் இணைப்புச் செய்யப்பட்டு கடமையாற்றும் சகல ஆசிரிய ஆலோசகர்களுக்குமான பயிற்சி நெறி 26.08.93 முதல் 29.8.93 வரை காலை 8.30 மணிதொடக்கம் மாலை 4.30 மணிவரை யாழ்வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக யாழ் பிரதேச கல்விப் பணிப்பாளர்தெரிவித்துள்ளார்.

அத்துடன் இம்மாதம் 30, 31-ந் திகதிகளில் அனைத்துக்கல்விக் கோட்டங்களிலும் கடமையாற்றும் ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர்களுக்கான பயிற்சி நெறி ஒன்றையும் யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் நடாத்த யாழ்கல்வித்திணைக்களம் ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

# மேடையில் இருப்பதை விட கிரிக்கட் ரசிப்பதே மேலானது

அநுரா பண்டாரநாயக்க

(கொழும்பு)

கே. பி.சில்வா, வை. பி. சில்வா, நிஹால் பெரேரா, மற்றும் தர்மசிறி சேனநாயக்க போன்றோருடன் கூட்டத்தில் கலந்து கொள்வதை விட கிரிக்கட் பார்த்து ரசிப்பதுமேலானது என்று அநுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

வெள்ளியன்று கொழும்பில் அவர் வெளியிட்ட அறிக்கையொன்றில் மேலும் குறிப்பிடுகையில் 1953-ம் ஆண்டின் ஹர்த்தாலை நினைவுபடுத்தும் முகமாக சுதந்திரக் கட்சியின் தலைமையில் பொதுஜன மக்கள் முன்னணியினால் நுகேகொட மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் சுமார் 500 பேருக்கும் குறைவானவர்களே கலந்து கொண்டனர். அதேஇடத்தில் சாதாரண நாட்களில் கூட சுமார் 2000 பேர்வரையிலாவது நடமாடுவது வழக்கம். கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருப்பதால்தான் எனக்கு அந்தக் கூட்டத்தில் பேச அழைப்பு விடுவிக்கப்படவில்லை என பொதுச்செயலாளர் தர்மசிறி சேனநாயக்க கூறினார். ஆனால் அழைத்திருந்தாலும் கூட நான் போயிருக்க மாட்டேன். கே. பி. சில்வா, வை. பி. சில்வா, நிஹால் பெரேரா போன்றோருடன் மேடையில் அமர்ந்திருப்பதை நான் விரும்பவில்லைபதிலுக்கு அன்றைய தினத்தில் சுமார் 50,000க்கும் மேற்பட்டவர்களுடன் நானும் கெத்தாராம விளையாட்டரங்கில் அமர்ந்திருந்து றோசான் மகாநாம, அர்ஜுனா ரணதுங்க போன்றோர் இந்திய அணிக்குஎதிராகவிளையாடிய கிரிக்கட்டை ரசித்துக் கொண்டிருந்தேன், எனவும் அநுரா பண்டாரநாயக்க கூறியுள்ளார்.

## தலைமைத்துவ பயிற்சி நெறி

யாழ். உள்ளூராட்சித் திணைக்களத்தின் அனுசரணையுடன் சனசமூக நிலையங்களில் உறுப்பினர்களாக உள்ளவர்களுக்கு ஆரம்பிக்கப்படவுள்ள தலைமைத்துவப் பயிற்சி நெறி அக்டோபர் 2-ம் திகதி ஆரம்பமாக உள்ளதாக யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். டிவகலாலா தெரிவித்துள்ளார்.

இப்பயிற்சி நெறி யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (17)

# சென்னை வெடிகுண்டு சம்பவத்தில் ஆர்.டி.எக்ஸ் பயன்படுத்தப்பட்டது

## புலனாய்வாளர்கள் தெரிவிப்பு

(சென்னை)

சென்னையிலுள்ள ஆர். எஸ் எஸ் தலைமையக கட்டடத்தில் இம்மாதம் எட்டாம் திகதியன்று நடைபெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்தில் ஆர்.டி எக்ஸ் வெடிபொருள் பயன்படுத்தப்பட்டமைக்கான சான்றுகள் கிடைத்திருப்பதாக புலனாய்வு பணியில் ஈடுபட்டுள்ள பொலிஸ் அதிகாரிகள் கூறியுள்ளனர். இந்தச்சம்பவம் பற்றிய விசாரணையில் ஈடுபட்ட தடயவியல் நிபுணர்களை மேற்கோள் காட்டி அவர்கள் மேலும் கூறுகையில், ஆர்.டி எக்ஸ், மற்றும் பி. ஈ கே போன்ற சக்திவாய்ந்த வெடி பொருள்கள் பயன்படுத்தப்பட்டதாகவும், நெடும் தொலைவிலிருந்து இயக்கி வெடிக்க வைக்கப்பட்டதா அல்லது குறிப்பிட்ட நேரத்துக்கு வெடிக்கக்கூடிய வகையில் செய்யப்பட்டிருந்ததா என்பது பற்றி ஆராயப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை இக்குண்டு வெடிப்புடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இருவரின் பெயர்களை அறிவித்துள்ள மாநிலக் காவல் துறையினர் இவர்கள் பற்றிய தகவல் தருவோருக்கு இரண்டு லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் எனவும் பிரகடனப் படுத்தியுள்ளனர்.

## தேர்தல் முடிவுகளைவெளியிட உச்சநீதிமன்றம் கோரிக்கை

(டில்லி)

புனே உள்ளாட்சித் தொகுதியிலிருந்துமகாராஷ்டிரா சட்டமன்ற மேலவைக்கு நடைபெற்ற தேர்தலின் முடிவுகளை அறிவிக்கும்படி உச்ச நீதிமன்றம் தேர்தல் ஆணையகத்தைக் கோரியுள்ளது.

இந்தத்தேர்தலில் மகாராஷ்டிரா மாநில முதல்வர் ஷரத் பவார் போட்டியிட்டது தெரிந்ததே.

இத்தொகுதியின் தேர்தலில் அளிக்கப்பட்டவாக்குகள் எண்ணும் பணி ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும், இத் தேர்தல் தொடர்பாக முதல்வர் சரத் பவார் தாக்கல் செய்துள்ள மனு விலக்கிக்கொள்ளப்பட்ட பின்னர் முடிவுகள் அறிவிக்கப் படலாம் என்று தேர்தல் ஆணையகத்தை சேர்ந்த வழக்கறிஞர் ஒருவர் நீதிமன்றில் தெரிவித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ராஜ்ய சபாத் தேர்தலில் காங்கிரசுக்கு மூன்று இடங்கள்

(டில்லி)

இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் ராஜ்ய சபா இடங்களுக்கான தேர்தலில் மேற்கு வங்காள மாநிலத்தில் ஒரு இடத்தில் மட்டும் காங்கிரஸ் வெற்றி பெற்றுள்ளது. ஐந்து இடங்களில்இடதுசாரிக் கட்சிகள் வெற்றி பெற்றுள்ளன. குஜராத் மாநிலத்தில் நடைபெற்ற ராஜ்யசபாத் தேர்தல்களில் காங்கிரஸ்கட்சி இரண்டு இடங்களையும், பாரதீய ஜனதா ஒரு இடத்தையும் பெற்றுள்ளன.

## இந்திய கடல் எல்லைக்குள் இலங்கை மீனவர்கள் கைது

(சென்னை)

திருச்செந்தூர் பகுதியில் இந்தியாவின் கடல் எல்லைக்குள் புகுந்த இலங்கை மீனவர்கள் ஐந்து பேர் கடலோர காவற்படையினால் கைது செய்யப்பட்டுள்ளனர். தற்போது தூத்துக்குடி அனல் மின்நிலையக் காவல் நிலையத்தில் இவர்களை ஒப்படைத்த கடலோர காவற்படையினர் அவர்களிடமிருந்த படகு வலைகள் மற்றும்சுமார் ஆயிரம் கிலோ மீன் என்பவற்றையும் பறிமுதல் செய்துள்ளனர்.

மரத்தை மனிதன் வாழவிட்டால்
மரம் மனிதனை வாழவைக்கும்

# ஈழநாதம்

# எகிப்திய அமைச்சர் குண்டுத் தாக்குதலில் காயம்

(கொய்ரோ)

எகிப்திய உட்துறை அமைச்சர் முஸ்லிம் தீவிரவாதிகள் பதுங்கியிருந்து நடத்திய குண்டுத் தாக்குதலில் படுகாயமடைந்தார். நேற்று தலைநகர் கெய்ரோவில் இவரது வாகனம் பதுங்கித் தாக்குதலுக்குள்ளானபோது இவரின் மெய்க்காவலர்கள் பலர் பலியாகினர்.

தூரத்திலிருந்து இயக்கப்பட்ட குண்டு ஒன்று முதலில் வெடிக்கவைக்கப்பட்டது. தொடர்ந்து அமைச்சரின் காருக்கும் ஏனைய வாகனங்களுக்கும் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு தீவிரவாதிகள் தப்பியோடிவிட்டனர். உட்துறையமைச்சு அலுவலகம் அமைந்திருந்த இடத்திற்கு அருகிலுள்ள ஒடுங்கிய பாதையிலேயே இத்தாக்குதல் நடந்தது.

அண்மைக்காலமாக அரசைக் கவிழ்க்க முஸ்லிம் தீவிரவாதிகள் எகிப்தில் தாக்குதல்கள் நடத்தி வருகின்றனர். நேற்று படுகாயமடைந்த அமைச்சர் மாகாண ஆளுநராகவும் பதவி வகித்து வருகிறார். இவரின் மாகாணத்தில் தீவிரவாதிகளுக்கும் பாதுகாப்பு படையினருக்கும் இடையில் அடிக்கடி மோதல்கள் இடம்பெற்று வருகின்றன இவர் தீவிரவாதிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுத்துவந்தவர் என்று கூறப்படுகிறது.

படுகாயமடைந்த இந்த அமைச்சர் இப்போது சத்திர சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## குழந்தை காயம்

இரண்டு வயதுக் குழந்தை கிணற்று துலாவில் நசியுண்டு படுகாயம் அடைந்த நிலையில் யாழ். மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார்.

சாவகச்சேரியைச் சேர்ந்த வ. கோபிகா (வயது 02)என்ற சிறுமியே படுகாயமடைந்தவராவர்.

வீட்டார் கிணற்றில் தண்ணீர் எடுக்கும்போது துலாவின் அடிப்பக்கத்தில் தற்செயலாக சிறுமி சென்றதால் துலா சிறுமியை நசித்ததாக தெரியவருகின்றது. குழந்தை உடன் சாவகச்சேரி மருத்துவ மனைக்கு கொண்டுவந்தும் உடனடியாக தனியாரின் வாகனத்தில் யாழ் மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டது. (86)

## கலந்துரையாடல்

யாழ். மாவட்ட கிராம சேவையாளர்கள் (பளை உட்பட) அனைவருக்குமான கலந்துரையாடல் இன்று கோண்டாவில் மாவட்ட அரசியல் துறை செயலக மண்டபத்தில் பிற்பகல் 3. மணிக்கு நடைபெற இருக்கின்றது இக்கலந்துரையாடலில் அனைத்து கிராம சேவையாளர்களையும் சமுகம் கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

# அக்டோபரில் காமினிக்கு அமைச்சர் பதவி கிட்டும்?

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்கட்சி, சிறிலங்கா மக்கள் கட்சி, தேசவிமுக்திபெரமுனை ஆகிய ஐந்து கட்சிகளை உள்ளடக்கிய பொதுமக்கள் கூட்டணி தன்னை மீளமைத்துக் கொள்வதோடு எந்த நேரத்திலும் தேர்தலுக்கு முகம் கொடுக்க கூடியதாக மாவட்ட மட்ட தொகுதி மட்ட அமைப்புகளை ஒழுங்கமைத்து வருகின்றன.

இதேசமயம் காமினி திஸநாயக்காவையும் ஜி எம். பிரேமச்சந்திரவையும் அமைச்சரவையில் சேர்த்துக் கொள்வதற்காக ஒக்டோபர் மாதத்திற்கு முன் மற்றொரு அமைச்சரவை மாற்றத்தை ஜனாதிபதி செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. வருட முடிவில் அல்லது அடுத்த வருட ஆரம்பத்தில் திடீர் தேர்தல் நடைபெறும் என எதிரணியினர் ஊகம் தெரிவித்துள்ளனர். இதற்கென செப்டம்பர் 3ஆம் திகதி முதல் 18 மாவட்டங்களில் கூட்டங்களை நடத்த எதிரணிகள் தீர்மானித்துள்ளன.

எதிர்க்கட்சிகள் கூட்டணியின் முதல் கூட்டம் கண்டியில் நடைபெறும். அதற்குமுன் செப்டம்பர் 2ஆம் திகதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் ஏனைய கட்சித் தலைவர்களும் தலதா மாளிகையில் நடைபெறும் சமயக் கிரியைகளில் கலந்துகொள்வர். இது பொதுமக்கள் கூட்டணியின் தேர்தல் பிரசாரம் ஆரம்பமாகக் கருதப்படுகிறது.

## விவசாயிகளுக்கு துப்பாக்கி

(கொழும்பு)

காட்டு விலங்குகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாத்துக் கொள்வதற்குவிவசாயிகளுக்கு துப்பாக்கிகள் வழங்கப்படவுள்ளன.

பாதுகாப்பு தொடர்பான பாராளுமன்றக் குழுவின்கூட்டமொன்றிலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி கூட்டத்தில் கிராமப் பகுதிகளில் உள்ள பொலிஸ் நிலையங்களில் பெருமளவிலான துப்பாக்கிகள் இருக்க வேண்டும் எனவும் இவற்றை விவசாயிகள் தற்காலிகமாகவும் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அரசாங்கம் மேற்கொண்ட முடிவைத் தொடர்ந்தே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

விவசாயிகள் இத்துப்பாக்கிகளைப் பெற்று பயன்படுத்திக் கொள்வதற்கான அனுமதியை வழங்கும் அதிகாரம் பொலிஸ் அத்தியட்சகர்களுக்கும் உதவி பொலிஸ் அத்தியட்சகர்களுக்கும்வழங்கப்படவுள்ளன.

## பிறப்பு அத்தாட்சி பத்திரம்

யாழ். போதனா வைத்திய சாலையில் கடந்த 1991 ஆம் ஆண்டு தொடக்கம் பிறந்த குழந்தைகள் உட்பட யாழ். நகர் மேற்கு பிறப்புப் பதிவா

## இணைப்பு ஏற்பட்டாலும் போராட்டம் தொடரும்

சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

ஐ.ஐ.தே. முன்னணி,ஐக்கிய தேசியக்கட்சி இணைப்பு ஏற்பட்டு மக்கள் கூட்டணி உடைந்தாலும் அரசியல் போராட்டத்தை நடத்தப் போவதாக மேற்கு மாகாணசபை முதலமைச்சர் சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்தார்

கொழும்புப் பத்திரிகை ஒன்றிற்குவழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி துரோகிகள் என்று மக்கள் வாக்கு போடவில்லை இடதுசாரிகளுடன் சேர்த்து மக்கள் முன்னணியை அமைக்கவே டி.யு.என். எவ்வுக்கு மக்கள் வாக்களித்தனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## ரணதுங்காவின் மகனுக்கு ஐ. நா. குழுவில் பதவி

அதிகாரிகள் அதிருப்தி

(கொழும்பு)

ராஜாங்க அமைச்சர் ஏ ஜே ரணதுங்காவின் மகன் ஐ. நா. சபை சிறிலங்கா தூதுக்குழுவின் இரண்டாவது செயலாளராகக் கடமையாற்றுவது பற்றி சிறிலங்கா வெளிநாட்டுச் சேவை நிர்வாக அதிகாரிகள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கப் பெண் ஒருவரைத் திருமணம் செய்துள்ள இவர் இந்தப்பதவி வகிக்க வெளிநாட்டுச் சேவைப் பிரமாணங்கள் அனுமதிக்காது என்று ஜனாதிபதி டி. பி. விஜதுங்காவுக்குச்சுட்டிக்காட்டப்பட்டுள்ளது அமைச்சரின் மகன் கடந்த நான்கு வருடங்களாக இந்தப்பதவியைவகித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

ராஜதந்திரி ஒருவர் வெளிநாட்டுப் பெண்ணைத் திருமணம் செய்யும் பட்சத்தில் பாதுகாப்புக் காரணங்களுக்காக அவர் பதவி விலக வேண்டும் என்று சொல்லப்படுகிறது.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சரஸ்வதி துரைசிங்கம்
(மலேசியா)

காரைநகர் நாவலடிக்கேணியைப் பிறப்பிடமாகவும், மலேசியா (யோகூபாரை) வசிப்பிடமாகவும் கொண்ட திரு. பொ. துரைசிங்கத்தின் அன்பு மனைவி சரஸ்வதி துரைசிங்கம் அவர்கள் 18-07-93 இல் (யோகூபாரில்) காலமானார். இவர் காலம் சென்ற திரு. திருமதி. சங்கரப்பிள்ளை தங்கமுத்துவின் ஏக புத்திரியும், காலம் சென்ற ச. கணபதிப்பிள்ளை, ச. செல்லத்துரை ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

தகவல்:
திரு. ச. செல்லத்துரை
(நடுத்தெரு, காரைநகர்)

276, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(5724)

### திரு. சின்னப்பொடி தர்மலிங்கம்
(புறோக்கர் தறுமு)

இமையாணன் கிழக்கு, கேணியடியைச் சேர்ந்தவரும், முன்னாள் வடமராட்சி உழவு இயந்திர உரிமையாளர் சங்கத் தலைவரும், இமையாணன் அ. த. க. பாடசாலை அபிவிருத்திச் சங்கத் தலைவரும், சிறந்த சமூக சேவையாளருமாகிய உயர் திரு. சின்னப்பொடி தர்மலிங்கம் (புறோக்கர் தறுமு) அவர்கள் 18-08-93 புதன் அதிகாலை மாரடைப்பினால் மரணமானார். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

அன்பு மனைவி: கமலம்

பிள்ளைகள்: நந்தினி, சுபாதினி, சைமினி, சாந்தினி, தவச்செல்வன், தவநேசன்

## பாக். உளவு நிறுவனத்துடன் புலிகளுக்கு தொடர்பாம்

சுப்பிரமணியம் சுவாமி தெரிவிப்பு

(சென்னை)

பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ எஸ்.ஐயிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே தொடர்பு இருப்பதாக ஜனதா கட்சி தலைவர் சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்தார் சென்னையில் கடந்த 8ஆம் திகதி ஆர்.எஸ்.எஸ். தலைமை அலுவலக குண்டுவெடிப்பு தொடர்பாக இந்திய மத்திய புலனாய்வுத் துறையினரின் விசாரணையை கோரிய அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஆர்.டி.எக்ஸ் போன்ற வெடிகுண்டு பயன்படுத்தப் பட்டிருப்பதாக காவல் துறையினர் தெரிவிப்பதால் இந்தச் சம்பவம் நாட்டை உறுதி குலையச் செய்வதற்கான ஒரு பெரிய சதித்திட்டத்தின் ஒரு பகுதியே ஆகும் என பாரதீய ஜனதா கட்சியும் ஜனதாவும் கருத்துத் தெரிவித்துள்ளன.

இத்தகைய முயற்சிகளை முறியடிக்க வேண்டும் எனவும் மத்திய அரசு இவ்விடத்தில் தீவிரமாக செயற்படவேண்டும் என்றும் அவர்கள் கூறினர்.

மக்களவையில் கேள்வி நேரத்தின் பின் இவ் விடயத்தை எழுப்பிய எல். கே. அத்வானி மத்திய புலனாய்வுத்துறையின் விசாரணை நடத்தப்படவேண்டும் என்று கூறினார்.

சென்னை குண்டுவெடிப்பு

## இருவரது கம்பியூட்டர் படங்கள் வெளியீடு

(சென்னை)

சென்னை ஆர். எஸ். எஸ். தலைமை அலுவலகத்தில் இம் மாதம் எட்டாம் திகதி குண்டு வெடிப்பு நடப்பதற்குச் சற்று முன் அங்கு சென்றதாகக் கூறப்படும் இருவரது படங்களை தமிழ்நாடு காவல் துறை புலனாய்வுப் பிரிவு சாட்சிகள் கொடுத்த அடை... என்று பெயர் சொல்லிக் கொண்டு அவ் அலுவலகத்திற்குச் சென்றார்கள் என தெரிவிக்கப்பட்டது.

இவர்களில் சிவகுமார் என்பவரின் நான்கு கம்பியூட்டர் படங்களையும், ரவி என்பவரின் ஒரு கம்பியூட்டர் படத்தையும் தூரதர்சன் நேற்றிரவு ஒளிபரப்பியது.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்
### 18-08-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 1063

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

43-3576, 26-1019, 42-0488, 27-8754, 24-8714
24-2359, 28-3429, 24-7628, 27-5449, 27-6563
42-9220, 42-1750, 42-1623, 28-2511, 41-4194
27-5187, 40-4760, 26-0842, 29-0849, 24-3063.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-4648, 27-4628, 42-3368, 26-2745, 27-4301
24-7044, 25-6728 (ரக்ரர்).

Institution Of Engineers, Sri Lanka

தகவல்:
திரு. ச. செல்லத்துரை
(நடுத்தெரு, காரைநகர்)

276, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (5724)

# திரு. சின்னப்பொடி தர்மலிங்கம்

## (புறோக்கர் தறுமு)

இமையாணன் கிழக்கு, கேணியடியைச் சேர்ந்தவரும், முன்னாள் வடமராட்சி உழவு இயந்திர உரிமையாளர் சங்கத் தலைவரும், இமையாணன் அ. த. க. பாடசாலை அபிவிருத்திச் சங்கத் தலைவரும், சிறந்த சமூக சேவையாளருமாகிய உயர் திரு. சின்னப்பொடி தர்மலிங்கம் (புறோக்கர் தறுமு) அவர்கள் 18-08-93 புதன் அதிகாலை மாரடைப்பினால் மரணமானார். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

அன்பு மனைவி: கமலம்
பிள்ளைகள்: நந்தினி, சுபாதினி, சைமினி, சாந்தினி, தவச்செல்வன், தவநேசன்
மருமகன்: தமிழ்மாறன் (5723)

# திருமதி அன்னரத்தினம்மா விஸ்வநாதக் குருக்கள்

கல்வளை சண்டிலிப்பாயைச் சேர்ந்த கல்வளை விநாயகர் தேவஸ்தான முன்னாள் பிரதமகுரு பிரம்மஸ்ரீ சுப்பையாக் குருக்கள்-ஸ்ரீமதி இராசம்மா ஆகியோரின் புத்திரியும், சுழிபுரம் - குடியிருப்பு பிரம்மஸ்ரீ சோ. விஸ்வநாதக் குருக்களின் அன்பு மனைவியுமாகிய திருமதி அன்ரத்தினம்மா விஸ்வநாதக் குருக்கள் 18 - 8-1993 இல் காலமானார்.

அன்னார் விவேகானந்த சர்மா(முகாமையாளர், இலங்கை வங்கி - வடபிராந்தியக் காரியாலயம், கொழும்பு), விஜயானந்தசர்மா (சுவிற்சலாந்து), நகுலேஸ்வர சர்மா (கனடா), பரமேஸ்வரசர்மா (ஆசிரியர் யா/சன்மார்க்க மகாவித்தியாலயம் யாழ்ப்பாணம்), விக்னேஸ்வரசர்மா (கொழும்பு), கணேஸ்வரசர்மா (பிரான்ஸ்),ஞானேஸ்வரி, புஷ்பராணி (சுவிற்சலாந்து), சர்வேஸ்வரி, மங்களேஸ்வரி ஆகியோரின் அன்புத்தாயாரும்,

பிரம்மஸ்ரீ இ சபாரத்தினக்குருக்கள் (பன்னாலை, வரத்தலம் கற்பகவிநாயகர் தேவஸ்தான பிரதமகுருவும், இளைப்பாறிய அதிபரும்), ச கணபதீஸ்வரசர்மா (சுவிற்சலாந்து), சோ. சிவகடாட்சசர்மா (இளைப்பாறிய மாவட்டத் தொலைத் தொடர்புப் பரிசோதகர்), சரஸ்வதி, பிரேமாவதி (கனடா), நாகபூசணி,அமிர்தகலா, பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும்,

மயூரதன். தினேஷ், ஹரீஷ், திருமதி லலிதா சிவானந்தன், கணேஷானந்தசர்மா (யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடமாணவன்), கஜேந்தினி, முகுந்தன், காயத்திரி, கஜேந்திரசர்மா, சிவசுதன்,சுமுகன், சிவானந்தசர்மா (ஹட்டன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும்,

ஷர்மினி, சபேசன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (19-8-93) இன்று வியாழக்கிழமை காலை 10 - 00 மணிக்கு, இல. 197/1, நாவலர் வீதி யாழ்ப்பாணம்இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் கோம்பையன்மணல் மயானத்தில் நடைபெறும். உறவினர்களும் நண்பர்களும் இவ் அறிவித்தலை ஏற்றுகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
வி.பரமேஸ்வரசர்மா
(மகன்)

197/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (5719)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19-ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வுத்துறையினரின் விசாரணையை கோரிய அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஆர்.டி.எக்ஸ் போன்ற வெடிகுண்டு பயன்படுத்தப் பட்டிருப்பதாக காவல் துறை ... என்றும் அவர்கள் கூறினர்.

மக்களவையில் கேள்வி நேரத்தின் பின் இவ் விடயத்தை எழுப்பிய எல். கே. அத்வானி மத்திய புலனாய்வுத்துறையின் விசாரணை நடத்தப்படவேண்டும் என்று கூறினார்.

சென்னை குண்டுவெடிப்பு

# இருவரது கம்பியூட்டர் படங்கள் வெளியீடு

(சென்னை)

சென்னை ஆர். எஸ். எஸ். தலைமை அலுவலகத்தில் இம்மாதம் எட்டாம் திகதி குண்டு வெடிப்பு நடப்பதற்குச் சற்று முன் அங்கு சென்றதாகக் கூறப்படும் இருவரது படங்களை தமிழ்நாடு காவல் துறை புலனாய்வுப் பிரிவு சாட்சிகள் கொடுத்த அடையாளங்களை வைத்துக் கொண்டு கம்பூட்டர் மூலம் தயாரித்து வெளியிட்டுள்ளது.

இவர்கள் சிவகுமார், ரவி என்று பெயர் சொல்லிக் கொண்டு அவ் அலுவலகத்திற்குச் சென்றார்கள் என தெரிவிக்கப்பட்டது.

இவர்களில் சிவகுமார் என்பவரின் நான்கு கம்பியூட்டர் படங்களையும், ரவி என்பவரின் ஒரு கம்பியூட்டர் படத்தையும் தூரதரசன் நேற்றிரவு ஒளிபரப்பியது.

## சந்திப்பு

வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளைச் சேர்ந்த ஒலி, ஒளி அமைப்பு உரிமையாளர்கள் அனைவரையும் இன்று காலை பத்து மணிக்கு தமிழீழவிடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல்துறை செயலகத்தில் நடைபெறவிருக்கும் சந்திப்பு ஒன்றில் கலந்து கொள்ளும்படி யா. மாவட்டஅரசியல்துறைப் பொறுப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## வீரவணக்கக் கூட்டம்

வடமராட்சி கிழக்கு கடற்புலிகள் பிரிவில் ஏழாம் எட்டாம் மாதங்களில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்று இரவு 8.00மணிக்கு குடாரப்பு ஆழியவளை முகாமில் இடம் பெறவுள்ளது. இக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் உரையாற்றுவர் அதனைத்தொடர்ந்து விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகத்தினரின்கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## எறிகணை

டைதீவுச் சந்தியில் இருந்து இராணுவம் யாழ் நகரை நோக்கி பலத்த எறிகணை தாக்குதல்களைமேற்கொண்டதனால் குருநகர் பகுதிமக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி வெளியேறியதையும் காணக்கூடியதாக இருந்தது. குருநகரிலுள்ள அன்னை வேளாங்கண்ணி ஆலயத்திற்கருகாமையில் எறிகணை வீழ்ந்து வெடித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. [17]

## கொடுப்பனவுகள் வழங்கல்

(வடமராட்சி)

கரவெட்டி தபாலகத்தில் கடந்த மூன்று மாதங்களாக வழங்கப்படாமல் இருந்த தொழுநோய், காசநோய், புற்றுநோயாளருக்கான கொடுப்பனவுகள் யாவும் தற்போது வழங்கப்பட்டு வருவதாக தபாலதிபர் தெரிவித்தார். (யோ)

## புலமைப் பரிசில்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை மகளிர் கல்லூரியில் ஆண்டு 12 வகுப்பில் கல்வி பயிலும் மாணவிக்கு பருத்தித்துறை அன்னை சாரதா சேவாச்சிரமம் 5 ஆயிரம் ரூபாவை புலமைப் பரிசிலாக வழங்கவுள்ளது.

எதிர்வரும் சனிக்கிழமை மாணவி கௌசிகா பவரத்தினம் என்பவருக்கே ஆச்சிரம சுவாமி சித்ரூபானந்தா இப் புலமைப் பரிசிலை ஆச்சிரமத்தில் வைத்து வழங்கவுள்ளார். (யோ)

## ச. தே. செஞ்சிலுவை

அரசு தன்வசமுள்ள சந்தேக நபர்களின் பட்டியலை வெளியிட்டபோதிலும் விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்து இது வரை எந்த பதிலும் வரவில்லை என்றும் அமைச்சர் விமல் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை அரசு அவதானிக்கிறதா? யுத்தக்கைதிகளை விடுவிக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கிறது? என சுதந்திரக்கட்சி எம். பி. நிமால் சிறிபால்டி சில்வா எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்தபோதே அமைச்சர் விமல் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

லான துப்பாக்கிகள் இருக்க வேண்டும் எனவும் இவற்றை விவசாயிகள் தற்காலிகமாகவும் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அரசாங்கம் மேற்கொண்ட முடிவைத் தொடர்ந்தே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

விவசாயிகள் இத்துப்பாக்கிகளைப் பெற்று பயன்படுத்திக் கொள்வதற்கான அனுமதியை வழங்கும் அதிகாரம் பொலிஸ் அத்தியட்சகர்களுக்கும் உதவி பொலிஸ் அத்தியட்சகர்களுக்கும்வழங்கப்படவுள்ளன.

## பிறப்பு அத்தாட்சி பத்திரம்

யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த 1991 ஆம் ஆண்டு தொடக்கம் பிறந்த குழந்தைகள் உட்பட யாழ். நகர் மேற்கு பிறப்புப் பதிவாளர் பிரிவில் பிறந்த குழந்தைகளுக்கான பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் அவற்றை யாழ். போதனா வைத்தியசாலைப் பிறப்புப்பதிவாளர் பணிமனையில் நேரில் சென்று பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை 1993ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை பிறந்த சகல குழந்தைகளினதும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் தற்போது முடிவடைந்த நிலையில் உள்ளன என பிறப்புப் பதிவாளர் தெரிவித்துள்ளார். (24)

## விளையாட்டு போட்டி

தேசிய சர்வோதய சிரமதான இயக்கமும் சதாவதானி பாலர் பாடசாலை பெற்றோர் ஆசிரியர் சங்கமும் இணைந்து நடாத்தும் மேலைப் புலோலி சதாவதானிபாலர்பாடசாலை இல்ல விளையாட்டுப்போட்டி எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30மணிக்கு சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலைய முன்றலில் திரு. மு. வாமதேவன் தலைமையில் நடைபெறவுள்ளது. சர்வோதயம் வடபிராந்திய வெளிக்கள இயக்குனர் திரு. கி. சிவசுப்பிரமணியம் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (யோ)

## புக்காரா

றும் அதனை அண்டிய பகுதிகளை நோட்டமிட்டுச் சென்றுள்ளது.

மேற்படி விமானம் நேற்று நண்பகல் வேளையில் யாழ். நகரின் கரையோரப் பகுதிகளை நோட்டமிட்டுச் சென்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 18-08-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 1063

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

43-3576, 26-1019, 42-0488, 27-8754, 24-8714
24-2359, 28-3429, 24-7628, 27-5449, 27-6563
42 9220, 42-1750, 42-1623, 28-2511, 41-4194
27-5187, 40-4760, 26-0842, 29-0849, 24-3063.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-4648, 27-4628, 42-3368, 26-2745, 27-4301
24-7044, 25-6728 (ரக்ரர்).

Institution Of Engineers, Sri Lanka

**Centre – Northern Province**

INTRODUCTORY COURSE
FOR
PRE UNIVERSITY
ENGINEERING STUDENTS

Date of Commencement:
20-th Aug 1993, Friday

Time 10.00 a. m; Venue:
Selvanayagam Block University of Jaffna.

Participants are Kindly requested to pay an initial Sum of Rs. 300/- before the Commencement of the Course.

"VIMALAM" - SECRETARY
Nallur Cross Road, Jaffna.

(இ-7220)

# மரண அறிவித்தல்

திருமதி

# முருகேசு பாக்கியரத்தினம்

(பாக்கியம்)

கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதியைச் சேர்ந்த காலஞ்சென்ற கார்த்திகேசு பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் மகளும், இணுவில் கிழக்கு வாசியுமான முருகேசு பாக்கியரத்தினம் 18. 08. 93 புதன்கிழமை சிவபதமடைந்தார். அன்னார் மாணிக்கம் இராசம்மா, சந்தையா-மங்கையர்க்கரசி, இளையதம்பி அன்னரத்தினம், சுப்பிரமணியம் பராசக்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும், முதலித்தம்பி-முருகேசுவின் அன்பு மனைவியும், மணிவண்ணன் (சுவிஸ்) அவர்களின் அன்புத்தாயாரும், அமுதவல்லி (சுவிஸ்), அன்பு மாமியாரும், மாறன் (சுவிஸ்) அன்புப் பேர்த்தியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று 19. 08. 93 வியாழக்கிழமை 12 மணியளவில் இணுவில் பூவோடை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கட்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
முருகேசு.
(கணவன்)

அங்களப்பாய்,
இணுவில் கிழக்கு,
இணுவில். (5725)